பெண்மை

அன்பும் ஆர்வமும் அடக்கமும் சேர்ந்தும்
உண்மைத் தன்மையும் உறுதியும் மிகுந்தும்
தன்னல மறுப்பும் சகிப்புத் தன்மையும்
இயல்பாய் அமைந்தும் இன்பசொ ரூபமாய்த்
தாயாய் நின்று தரணியைத் தாங்கும்;
தாரமாய் வந்து தளர்வைப் போக்கும்;
உடன்பிறப் பாகி உறுதுணை புரியும்;
மகளாய்ப் பிறந்து சேவையில் மகிழும்;
அயலார் தமக்கும் அன்பே செய்யும்;
நாணம் கெடாமல் நட்புகொண் டாடும்.

– வெ. இராமலிங்கனார்

பொருள் : இப்பாடலில் தாய், மனைவி, தமக்கை, தங்கை, மகள் எனப் பெண்மைக்குப் பன்முகங்கள் உண்டு என்பதனை நாமக்கல் கவிஞர் எடுத்துக்காட்டியுள்ளார்.

அன்பு, ஆர்வம், அடக்கம் முதலியன பெண்மையின் பண்புகளாகும். உண்மைத்தன்மையும் உள்ள உறுதியும் தன்னலமில்லாது குடும்பநலம் பேணுதலும், யார் எது செய்யினும் பொறுத்துக்கொள்ளும் தன்மையும் அமைந்து, தாய் என்னும் அன்பு வடிவில் இவ்வுலகைத் தாங்குபவள் பெண்ணே.

கணவன் மனம் தளரும்போதெல்லாம் அவனது கவலைக்கு மருந்தாக இருப்பவள் மனைவி. தமக்கையோ தங்கையோ உடன்பிறந்தானுக்கு உறுதுணையாகத் திகழ்கிறாள். மகளாகப் பிறந்து தந்தைக்குப் பணிவிடை செய்து மகிழ்பவளும் பெண்ணே. அயலாரிடத்து அன்பு காட்டியும் தனக்கே உரிய நாணம் கெடாது நட்புக் கொள்வதும் பெண்மையின் சிறந்த பண்புகளாகும்.

சொற்பொருள் : உறுதி – உளஉறுதி; சகிப்புத்தன்மை – பொறுத்துக்கொள்ளுதல்; சொரூபம் – வடிவம்; தரணி – உலகம்; தாரம் – மனையாள்; சேவை – தொண்டு; அயலார் – உறவல்லாதோர்.

இலக்கணக்குறிப்பு : அன்பும் ஆர்வமும் அடக்கமும் – எண்ணும்மை; இன்ப சொரூபம் – உருவகம்.

ஆசிரியர்குறிப்பு : கவிஞர் வெ. இராமலிங்கனார், நாமக்கல் மாவட்டத்திலுள்ள மோகனூரில் பிறந்தவர். இவர்தம் பெற்றோர் வெங்கட்ராமன் – அம்மணி அம்மாள் ஆவர். கவிதைப் போட்டிகள் பலவற்றில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றார். தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர். இவருக்கு நடுவணரசு பத்மபூஷண் விருது வழங்கிச் சிறப்பித்தது. இவர், தமிழக மக்களால் காந்தியக் கவிஞர் எனப் பெருமையுடன் வழங்கப் பெற்றார். இவரின் காலம் கி.பி. 1888 முதல் 1972 வரையாகும்.

நூற்குறிப்பு : நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் கவிதைத் தொகுப்பில் தெய்வத் திருமலர், தமிழ்த்தேன் மலர், காந்திமலர், தேசிய மலர், சமுதாய மலர், பெரியோர் புகழ்மலர், திருநாள் மலர், சிறுகாப்பிய மலர், இசைமலர், அறிவுரை மலர், பல்சுவை மலர் ஆகிய தலைப்புகளில் கவிதைகள் அமைந்துள்ளன. இப்பாடல், சமுதாய மலர் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.

நாமக்கல்லாரின் படைப்புகள்

இசைநாவல்கள்	3	இலக்கியத்திறனாய்வுகள்	7
கட்டுரைகள்	12	கவிதைத்தொகுப்புகள்	10
தன் வரலாறு	3	சிறுகாப்பியங்கள்	5
புதினங்கள்	5	மொழிபெயர்ப்புகள்	4

மாதிரி வினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் பற்றிக் குறிப்பு எழுதுக.
2. பெண்மையின் பன்முகங்கள் யாவை?
3. தாயின் இனிய பண்புகள் யாவை?

ஆ) சிறுவினா

பெண்மையின் குணங்களாக இராமலிங்கனார் கூறுவன யாவை?

தில்லையாடி வள்ளியம்மை

ஆங்கிலேயரின் அடக்குமுறைக் கொடுமைக்கு எதிராக உரிமைக்குரல் எழுப்பிப் போராடினோர் பலர். அப்போராட்டத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் ஈடுபட்டார்கள். அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் தில்லையாடி வள்ளியம்மை ஆவார்.

பெற்றோரும் பிறப்பும்

புதுச்சேரியில் வாழ்ந்த முனுசாமி என்ற நெசவாளி, தில்லையாடி என்னும் ஊரில் பிறந்த மங்களம் என்ற மங்கையை மணந்தார். திருமணத்திற்குப் பின்னர் தில்லையாடியிலேயே அவர்கள் நெசவுத் தொழில் செய்து வாழ்ந்து வந்தனர். அந்நாளில், ஆங்கிலேயர் தம் நாட்டுத் துணிகளை இந்தியாவிற்குக் கொண்டு வந்து விற்பனை செய்தனர். இதனால், நம் நாட்டில் உற்பத்தி செய்த துணிகளின் விற்பனை குறைந்தது. நெசவுத்தொழில் பாதிக்கப்பட்டது. அப்பாதிப்புக்கு உட்பட்டவர்களுள் முனுசாமியும் ஒருவர்.

நெசவுத்தொழில் பாதிப்பால் வறுமையில் வாடிய முனுசாமி தம் மனைவியுடன் வேலைதேடித் தென் ஆப்பிரிக்காவில் குடியேறினார். அங்கு ஜோகன்ஸ்பர்க் என்னும் நகரத்தில் சிறிய அளவில் காய்கறிக் கடை நடத்தினார். இந்நிலையில், 1898ஆம் ஆண்டு முனுசாமி, மங்களம் இணையருக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தையே வீரமங்கை வள்ளியம்மை ஆவார்.

வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் பிறந்தார். எனினும், இவரின் தாயார் பிறந்த ஊரான தில்லையாடியின் பெயரைக்கொண்டு தில்லையாடி வள்ளியம்மை என்று அழைக்கப்படுகிறார்.

அறப்போர்

தென்னாப்பிரிக்க நாட்டின் திருமணப்பதிவுச் சட்டப்படியும், கிறித்துவ மதச் சட்டப்படியும் நடைபெறாத திருமணங்கள் செல்லாது என்று அந்நாட்டு உச்ச நீதிமன்றம் 1913ஆம் ஆண்டு ஒரு தீர்ப்பை வெளியிட்டது. அத்தீர்ப்பு, அங்குக் குடியேறியிருந்த இந்தியர்கள் அனைவருக்கும் எதிராக அமைந்திருந்தது. இதனால், பாதிக்கப்பட்ட இந்தியர்கள் தமது உரிமையை மீட்க அறப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போராட்டத்தினைக் காந்தியடிகள் தலைமை ஏற்று வழிநடத்தினார். போராட்டத்தின்பொழுது காந்தியடிகள் நிகழ்த்திய வீரம் செறிந்த உரை, சிறுமி வள்ளியம்மையின் மனத்தில் ஆழமாகப் பதிந்தது. காந்தியடிகளின் உரிமை முழக்கத்தினால் கவரப்பட்ட வள்ளியம்மை அறப்போராட்டத்தில் முனைப்புடன் பங்கேற்றார். 1913ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 23ஆம் நாள் வால்க்ஸ்ரஸ்ட் என்னும் இடத்தில் நடைபெற்ற அறப்போரில் வள்ளியம்மை கைது செய்யப்பட்டார். அவருக்குத் தென்னாப்பிரிக்க நீதிமன்றம் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தது.

சிறைவாழ்க்கை

சிறையில் வள்ளியம்மைக்குக் கல்லும் மண்ணும் கலந்த உணவே தரப்பட்டது. இதனால் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டார். கடுமையான காய்ச்சலுக்கு ஆட்பட்ட அவருக்குப்போதியமருத்துவம் அளிக்கப்படவில்லை. சிறைச்சாலையில் நோயுடன் உயிருக்குப் போராடிய நிலையில் விடுதலை செய்யப்பட்டார்.

நாட்டுப்பற்று

உடல்நலம் குன்றிய நிலையில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட வள்ளியம்மை தமது வீட்டில் படுத்த படுக்கையாக இருந்தார். இதனை அறிந்த காந்தியடிகள் வள்ளியம்மையைக் காண வந்தார்; காய்ச்சல் காரணமாக உடல் மெலிந்து நைந்து கிடந்த வள்ளியம்மையின் நிலைகண்டு கண்கலங்கி நின்றார்.

“சிறைத்தண்டனைக்காக நீ வருந்துகிறாயா ?”, என்று வள்ளியம்மையிடம் கேட்டார் காந்தியடிகள். உடல்நிலை தளர்ந்திருந்த அந்நிலையிலும் வள்ளியம்மை, “இல்லை இல்லை மீண்டும் சிறை செல்வதற்குத் தயார்” என்று கூறினார். அத்துடன், இந்தியர்களின் நலனுக்காக எத்தகு இன்னல்களையும் ஏற்பேன். அதற்காக, என் இன்னுயிரையும் தருவேன் என்று கூறினார். வள்ளியம்மையின் பதிலைக் கேட்டுக் காந்தியடிகள் உள்ளம் நெகிழ்ந்தார். கொடிய அடக்குமுறைச் சிறைவாசத்திற்கு ஆளாகி நோயின் கடுமையினால், துன்புற்றநிலையிலும் வள்ளியம்மை தமது உரிமைப் போராட்ட உணர்விலிருந்து சிறிதும் மனம் தளரவில்லை. சிறைச்சூழலால் உடல்நலம் குன்றிய வள்ளியம்மை 1914 பிப்ரவரி இருபத்திரண்டாம் நாளன்று தமது பதினாறாம் அகவையில் மரணம் அடைந்தார்.

காந்தியடிகளின் கருத்து

"என்னுடைய சகோதரியின் மரணத்தைவிடவும் வள்ளியம்மையின் மரணம் எனக்குப் பேரிடியாக இருந்தது" என்று காந்தியடிகள் மனம் வருந்தினார்.

"மாதர்களுக்கு அணிகலன்களாகத் திகழும் துன்பத்தைத் தாங்கும் மனவலிமை, தன்மானம், நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். அவருடைய தியாகம் வீண் போகாது. சத்தியத்திற்காக உயிர்நீத்த அவருடைய உருவம் என் கண்முன் நிற்கிறது. நம்பிக்கைதான் அவரது ஆயுதம்" என்று தில்லையாடி வள்ளியம்மை குறித்து **இந்தியன் ஒப்பீனியன்** இதழில் காந்தியடிகள் எழுதியுள்ளார்.

தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள், **தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம்** என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தில்லையாடி வள்ளியம்மை நினைவைப் போற்றி
நடுவணரசு, அஞ்சல்தலையும் அஞ்சல் உறையும் வெளியிட்டுள்ளது.

தில்லையாடி – நாகப்பட்டினம் மாவட்டத்தில்
திருக்கடையூருக்குத் தெற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

சென்னை, வண்டலூர் உயிரியல் பூங்காவில் பிறந்த
பெண்புலிக்குட்டிக்குத் தில்லையாடி வள்ளியம்மை நினைவாக
வள்ளி எனப் பெயரிடப் பெற்றுள்ளது.

காந்தியடிகள், தமிழர்மீதும் தமிழ்மொழியின்மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டதற்கு வள்ளியம்மையும் ஒரு காரணம் என்று கூறலாம். காந்தியின் வாழ்க்கைப் பயணத்தில், அவர் மேற்கொண்ட சத்தியாக்கிரக வேள்விப்பணிக்கு முதல் களப்பலியாகி, அவரை மகாத்மா என்ற உயர்நிலைநோக்கித் திருப்பிய பெருமை தில்லையாடி வள்ளியம்மைக்கு உண்டு.

காந்தியடிகள் தமது தமிழகப் பயணத்தின்போது வாய்ப்புக் கிடைக்கும்பொழுதெல்லாம் வள்ளியம்மையின் தியாகத்தை நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார்.

திருமணமாகாத இளம் பெண்ணான வள்ளியம்மையின் வாழ்வு இந்திய விடுதலைப் போருக்கு முன்னோடியாக அமைந்தது. அவரது அளப்பரிய தியாகம் போற்றி வணங்கத்தக்கது.

அரசு செய்த சிறப்புகள்

வள்ளியம்மையின் நினைவைப் போற்றும்வகையில் தில்லையாடியில் தமிழ்நாடு அரசு அவரது சிலையை நிறுவியுள்ளது. கோ–ஆப்– டெக்ஸ் என்றழைக்கப்படும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் சென்னையிலுள்ள தனது அறுநூறாவது விற்பனை மையத்திற்குத் தில்லையாடி வள்ளியம்மை மாளிகை எனப் பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தி உள்ளது.

தென்னாப்பிரிக்க நாட்டில் இந்தியரின் நலனுக்காகப் போராடிய வீரத் தமிழ் மங்கை தில்லையாடி வள்ளியம்மையின் உரிமை உணர்வை அனைவரும் போற்றுவோம். நாட்டு நலனில் நாட்டம்கொண்டு தன்னலம் நீக்கிப் பொதுநலம் பேணி வாழ்வோம்.

ஒப்புநோக்குக. : திருப்பூர்க்குமரன், தில்லையாடி வள்ளியம்மை ஆகியோரின் விடுதலைப் போராட்ட முறைகளை ஒப்புநோக்குக.

மாதிரி வினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. தில்லையாடி வள்ளியம்மை எங்கு, எப்போது பிறந்தார்?
2. வள்ளியம்மை இளமையிலேயே அறப்போரில் ஈடுபடக் காரணமாக அமைந்தது எது?
3. காந்தியடிகள், வள்ளியம்மையைச் சந்தித்த நிகழ்வைக் கூறுக.
4. காந்தியடிகள், வள்ளியம்மை குறித்துக் கூறிய கருத்து யாது?
5. வள்ளியம்மையின் நினைவைப்போற்ற அரசு செய்த சிறப்புகள் யாவை?

ஆ) சிறுவினாக்கள்

1. வள்ளியம்மை ஈடுபட்ட விடுதலைப்போர் குறித்தும் அதன் விளைவு குறித்தும் எழுதுக.
2. வள்ளியம்மை குறித்துக் காந்தியடிகளின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

இ) நெடுவினா

வள்ளியம்மையின் வீர வாழ்க்கையைத் தொகுத்தெழுதுக.

இராணி மங்கம்மாள்

தமிழ்நாட்டில் நாயக்கர் மரபில் பெண்கள் முடிசூடி ஆட்சி செய்ததாக வரலாறு இல்லை. ஆனால், காப்பாட்சியாளராக ஆட்சிபுரிந்து உள்ளனர். அதற்குச் சிறந்த சான்றாகத் திகழ்ந்தவர்தான் இராணி மங்கம்மாள். அரசுரிமைக்கு உரியவர்கள் குழந்தைகளாக இருந்ததால், அவர்களுக்குப் பதிலாக இவர் காப்பாட்சியாளராக இருந்து ஆண்டார். மதுரையை ஆண்டுவந்த சொக்கநாத நாயக்கரின் மனைவி இராணி மங்கம்மாள். அக்காலத்தில், கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறுவது வழக்கமாக இருந்தது. இராணி மங்கம்மாளின் கணவர் இறந்தபோது தன்மகன் அரங்க கிருட்டினமுத்துவீரப்பன் இளம் வயதினனாக இருந்தான். அவனுக்குத் துணையாக இருக்கவேண்டும் என்னும் கடமையுணர்வினால் இராணி மங்கம்மாள் உடன்கட்டை ஏறவில்லை.

மகனுக்கு அரசும் அறிவுரையும்

மங்கம்மாள், தன் மகன் அரங்க கிருட்டினமுத்துவீரப்பனுக்குத் திருமணம் செய்வித்த பின்னர் முடிசூட்டினார்.

"அரசாட்சியை அடக்கத்தோடும் தந்திரத்தோடும் நாம் நோக்குதல் வேண்டும்; முன்கோபமும் அதன் விளைவும் அரசியலில் ஒருபோதும் வெற்றியைத் தராது; பகைவரை எதிர்கொள்ள எப்போதும் ஆயத்த நிலையில் இருப்பதோடு மிகுந்த பொறுமையுடனும் செயல்படவேண்டும்" என்றெல்லாம் மகனுக்கு அறிவுரை கூறினார். எந்த வேளையில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும் துணிந்து முடிவெடுக்கும் மனவலிமை

வேண்டுமென்றும் கூறினார். நாட்டையாளும் பொறுப்புக்கு வந்துவிட்டால், அனைவரையும் தம் குழந்தைகள்போல் எண்ணி, அன்பு செலுத்துதல் வேண்டும் என்றும் அறிவுரை பகன்றார்.

முத்துவீரப்பன் அன்னை காட்டிய வழியில் திறமையாக ஆட்சிபுரிந்தான்; தந்தை சொக்க நாதர் இழந்த பகுதிகளைப் போரிட்டு மீட்டான்; கோவில்களைக் கட்டி அறச்செயல்கள் பல செய்தான்; மக்களின் பசிப்பிணியைப்போக்க ஆங்காங்கே சத்திரங்களும் சாவடிகளும் கட்டினான்; நேர்மையைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை என்னும் உணர்வோடும் நடுவுநிலைமைப் பண்போடும் அமைதியாக ஆட்சி நடத்தி மக்களிடம் நற்பெயர் பெற்றான். ஏழாண்டுக்காலம் ஆட்சி நடத்திய அவன், அம்மைநோய் கண்டு உலக வாழ்வை நீத்தான்.

மங்கம்மாள் ஆட்சிப்பொறுப்பேற்றல்

மகன் முத்துவீரப்பனின் இறப்பு இராணி மங்கம்மாளுக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. மகன் இறந்த சில நாளில் மருமகள் சின்னமுத்தம்மாள் அழகிய ஆண்மகனைப் பெற்றெடுத்தாள். பெயரன் பிறந்தவுடன் இராணி மங்கம்மாள் குலம் தழைக்க, வழிபிறந்தது எனத் தெய்வத்திற்கு நன்றி செலுத்தினாள். ஆனால், சில நாளில் மருமகள் முத்தம்மாளும் காலமானாள். மறைந்துபோன மகன் – மருமகளின் நினைவுகள்அரண்மனை முழுவதும் நிறைந்து அவரைத் துன்பத்தில் மூழ்கச் செய்தன. இருப்பினும், அரசியல் பட்டறிவும் ஆட்சிப்பொறுப்பும் இராணி மங்கம்மாளின் மனத்தைக் கல்லாக்கியிருந்தன. மகன் முத்துவீரப்பன் இறந்ததால், கி.பி. 1688ஆம் ஆண்டு பெயரன் விசயரங்கச் சொக்கநாதன் பெயரளவில் அரியணையில் ஏற்றப்பட்டான். பாட்டி மங்கம்மாள் காப்பாட்சியாளராக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார். மங்கம்மாள் துயரங்களைத் தாங்கிக்கொண்டு ஆட்சிக் கடமைகளை அழகுற ஆற்றக்கூடிய வீராங்கனை என மக்கள் போற்றிப் புகழ்ந்தனர்.

திருவிதாங்கூர்ப்போர்

திருவிதாங்கூர் மன்னர் இரவிவர்மா, மதுரை நாயக்க அரசுக்குச் செலுத்த வேண்டிய திறைப்பொருள்களைச் செலுத்தவில்லை; கல்குளம் பகுதியிலிருந்த நாயக்கர் படையைத் தாக்கி அழித்தார். எனவே, தளபதி நரசப்பையன் தலைமையில் மங்கம்மாள் அனுப்பிய படை திருவிதாங்கூர்ப் படையைத் தோற்கடித்துத் திறைப்பொருள் மற்றும் பொன், பீரங்கி முதலிய பொருள்களையும் பெற்றுத் திரும்பியது.

தஞ்சைப் போர்

தஞ்சையை ஆண்ட மராத்தியருக்கும் மதுரை நாயக்கர்களுக்கும் இடையில் நல்லுறவு நிலவவில்லை. ஒருமுறை தஞ்சை ஷாஜி, மதுரை நாயக்கர் ஆட்சிப்பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றிக் கொண்டார். அவற்றை மீட்க, தளபதி நரசப்பையன் தலைமையில் மங்கம்மாள் ஒரு படை அனுப்பினார். அப்படை அப்பகுதிகளை மீட்டுத் தஞ்சையை அச்சுறுத்தியது. தஞ்சை அமைச்சர் பாலாஜி பண்டிதர் படையெடுப்பாளர்களுக்குப் பெரும்பொருள் கொடுத்தனுப்பினார்.

மைசூர்ப் போர்

இராணி மங்கம்மாள் காலத்தில் மைசூர் மன்னன் சிக்கதேவராயன் காவிரியின் குறுக்கே அணைகட்டியபோது, மங்கம்மாள் தஞ்சையுடனான பகையை மறந்து, அந்நாட்டு அரசு உதவியுடன் எதிர்ப்புத் தெரிவித்ததோடு அன்றி, மைசூர்மீது படையெடுக்க தஞ்சை–மதுரைக் கூட்டுப்படை ஒன்றை உருவாக்கினார். படை தயாரானது. ஆனால், இவ்வேளையில் கருநாடகப்

பகுதியில் கடும்மழை பெய்ததால் சிக்கதேவராயன் கட்டிய அணைகள் உடைந்தன; சிக்கல் முடிவடைந்தது.

சமயக் கொள்கை

மதுரை நாயக்க மன்னர்களைப்போலவே மங்கம்மாள் சமயப்பொறையைக் கடைப்பிடித்தார்; கிறித்தவ மதக்குருமார்களைச் சமயப் பேருரை செய்ய அனுமதித்தார். ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தைக் கைக்கொண்டு வாழவிடுவதே தருமம் என்ற கொள்கையை மங்கம்மாள் பின்பற்றினார். சமயத் தொடர்பாகச் சிறை வைக்கப்பட்ட மெல்லோ பாதிரியாரை விடுதலை செய்ததோடு போசேத் என்ற குருவைத் தம் அரசவையில் வரவேற்று விருந்தோம்பினார்.

இசுலாமியர்களுக்கும் மங்கம்மாள் மானியம் அளித்துள்ளார். இசுலாமியர்களின் நல்வாழ்விற்காகவும் பள்ளிவாசல்களின் பாதுகாப்பிற்காகவும் நிலங்களை மானியமாக வழங்கியது குறித்துக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

மங்கம்மாள் அறச்செயல்கள்

மக்கள் நலம்பேணும் நல்ல பல பணிகளை மங்கம்மாள் செய்துள்ளார். அவர், மதுரையில் பெரியதொரு அன்னச்சத்திரத்தைக் கட்டினார்; புதிய சாலைகள் பல அமைத்தார்; கன்னியாகுமரிக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலை, மங்கம்மாள் சாலை என அழைக்கப்படுகிறது. குதிரைகள், பசுக்கள், காளைகள் முதலியன நீர் அருந்துவதற்கு வசதியாகச் சாலையோரங்களில் தண்ணீர்த் தொட்டிகளைத் திறக்க ஆணையிட்டார்.

பொதுமக்களுக்காகக் குடிநீர்க் குளங்கள், ஊருணிகள், கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டச் செய்தார். தொழில் வளர்ச்சி, வணிகம், மக்கள்தொடர்பு ஆகியவற்றிற்கு வழிவகுத்தார். மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திற்குப் பொன்னும் பொருளும் வழங்கினார். ஆனித்திங்களில் ஊஞ்சல் திருவிழா நடைபெற ஏற்பாடு செய்தார். கொள்ளிடத்தில் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் துன்புற்றபோது அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் வழங்குவதற்கு ஆணையிட்டார். வெள்ளத்தால் அழிந்த கரையோரத்துச் சிற்றூர்களையும் சீரமைத்தார். மத்தியச் சந்தை, மதுரைக் கல்லூரி உயர்நிலைப்பள்ளிக் கட்டடம், இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவரின் பழைய அலுவலகம் முதலியவற்றை மங்கம்மாள் கட்டியதாகக் கூறுவர்.



மங்கம்மாள் இறையுணர்வும் பெருந்தன்மையும்

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் விழாக்கள் நடைபெறும்பொழுது, இராணி மங்கம்மாள் தமது செங்கோலை அம்மனின் முன்வைத்து வழிபடுவதனை வழக்கமாகக் கொண்டிருந்தார். சித்திரை முழுமதி நாளில் இராணி மங்கம்மாளும் இளவரசரும் தமுக்கம் அரண்மனையில் தங்கி, மீனாட்சி திருமணத்தைக் கண்டுகளித்தனர். ஆற்றில் இறங்கும் கள்ளழகரின் திருவடிகளை அவர்கள் இருவரும் வணங்கி மகிழ்வர்.

ஒருமுறை பழனி முருகனை வணங்க மங்கம்மாள் மலை ஏறிக்கொண்டிருந்தபோது, முருகனை வழிபட்டுத் திரும்பிய இளைஞன் ஒருவன், தன்னை மறந்த நிலையில் இராணியை மோதிவிடுவதுபோல் அருகில் வந்தான். மங்கம்மாளின் மெய்க்காவலர்கள் அவனைத் தண்டிக்க ஆயத்தம் ஆனார்கள். அவ்வேளையில் இராணி மங்கம்மாள் “இளைஞன் வேண்டுமென்றே தவறு செய்யவில்லை; பக்தி உணர்வில் தன்னை மறந்து கீழே இறங்கி வரும்பொழுது, நான் எதிரே வருவதனைக் கவனிக்கத் தவறிவிட்டான். இறைவனுக்கு முன்னால் ஏற்றத்தாழ்வுகள் இல்லை; அனைவரும் ஒன்றே. அவனை அவன் வழியில் போக விடுங்கள்” என்று பெருந்தன்மையோடு கூறினார்.

மங்கம்மாள் திறமையான ஆட்சியாளர்; எதிர்ப்புகளைத் தன் ஆற்றலாலும் அறிவு நுட்பத்தாலும் முறியடித்து வெற்றி நடைபோட்டவர்; துன்பங்கள் நம்மைச் செம்மைப்படுத்தி வளர்ப்பதற்கும், இன்பங்கள் நமக்கு விழிப்பூட்டுவதற்கும் வருவன என்பதனை உணர்ந்தவர்; தென்னாட்டைத் தன்னந்தனியே ஆண்ட பெண்ணரசி என்னும் புகழைப் பெற்றவர்; நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்டவர். மக்கள் நலம் நாடுவோர் பட்டியலில் மங்கம்மாளின் பெயர் மங்காத புகழோடு விளங்கும் என்பதில் ஐயமில்லை.

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. இராணி மங்கம்மாள் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற போர்கள் குறித்து எழுதுக.
2. இராணி மங்கம்மாள் செய்த அறச்செயல்கள் யாவை ?.

யாப்பு : செய்யுள் உறுப்புகள்
(எழுத்து, அசை, சீர், தளை)

செய்யுள் உறுப்புகள்

யாப்பு – யாக்கப்படுவது – கட்டப்படுவது. யாப்பு என்பது செய்யுள்.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறும் செய்யுளின் உறுப்புகளாகும்.

1. எழுத்து

செய்யுளில் குறில், நெடில், மெய், ஆய்தம் என்னும் எழுத்துகள் முதன்மையாகக் கருதப்படும். குறிலில், உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் அடங்கும். நெடிலில் உயிர்நெடிலும், உயிர்மெய் நெடிலும் அடங்கும். மெய் 'ஒற்று' எனவும் சொல்லப்படும், செய்யுளில் ஆய்தம் மெய்யாகக் கருதப்படும்.

நாணல் – இச்சொல்லில், நா – நெடில், ண – குறில், ல் – ஒற்றெழுத்து.

2. அசை

எழுத்து தனியாகவோ, பல சேர்ந்தோ ஓசைப்பட அசைந்து (பிரிந்து) நிற்பது அசை எனப்படும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

நேரசை : குறில் தனித்தும் குறில் ஒற்றடுத்தும், நெடில் தனித்தும் நெடில் ஒற்றடுத்தும் வருவது நேரசை எனப்படும்.

(எ–டு) குறில் தனித்து வரல்	–	க
குறில் ஒற்றுடன் வரல்	–	கல்
நெடில் தனித்து வரல்	–	கா
நெடில் ஒற்றுடன் வரல்	–	கால்

நிரையசை: குறில் இணைந்தும் குறில் இணைந்து ஒற்றும்; குறில் நெடில் இணைந்தும் குறில் நெடில் இணைந்து ஒற்றும் வருவது நிரையசை.

(எ–டு) குறில் இணைந்து வரல்	–	பட
குறில் இணைந்து ஒற்றுடன் வரல்	–	படம்
குறில் நெடில் இணைந்து வரல்	–	படா
குறில்நெடில் இணைந்து ஒற்றுடன் வரல்	–	படாம்

3. சீர்

அசைகள் தனித்தும் இணைந்தும் கூடி அடிக்கு உறுப்பாக அமைவது சீர் எனப்படும். அஃது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நால்வகைப்படும்.

ஓரசைச்சீர் : வெண்பாவின் ஈற்றில் நேரசை, நிரையசையுள் ஏதேனும் ஒன்று தனித்து நின்று சீராய் அமையும். அவற்றை ஓரசைச்சீர் என்பர். அவை நாள் (நேர்), மலர் (நிரை), காசு (நேர்பு), பிறப்பு (நிரைபு) என நால்வகை வாய்பாடுகளுள் ஒன்றைப் பெறும்.

(எ–டு) 1. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

என் – நேர் (நாள்)

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

படும் – நிரை (மலர்)

3. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

நாடு – நேர்பு (காசு)

4. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

உலகு – நிரைபு (பிறப்பு)

ஈரசைச்சீர் : நான்கு

இரண்டு அசைகள் சேர்ந்து ஒரு சீர் ஆவது ஈரசைச்சீர். நேரில் முடிவது இரண்டும், நிரையில் முடிவது இரண்டுமாக ஈரசைச்சீர் நான்கு ஆகும்.

சீர்	–	வாய்பாடு	
நேர் நேர்	=	தேமா	மாச்சீர் – 2 (தேமா, புளிமா என
நிரை நேர்	=	புளிமா	மாவில் முடிவதனால் மாச்சீர்.)
நிரை நிரை	=	கருவிளம்	விளச்சீர் – 2 (கருவிளம், கூவிளம்என
நேர் நிரை	=	கூவிளம்	விளத்தில் முடிவதனால் விளச்சீர்)

(ஈரசைச்சீர் நான்கும் ஆசிரியப்பாவிற்கு உரியவை.)

இவை இயற்சீர் எனவும், ஆசிரிய உரிச்சீர் எனவும் வழங்கப்படும்.

மூவசைச்சீர் : எட்டு

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீர் ஆவது மூவசைச்சீர். நேரசையில் முடிவது நான்கும் நிரை அசையில் முடிவது நான்குமாக மூவசைச் சீர் எட்டு ஆகும்.

காய்ச்சீர் : நான்கு

நேர் நேர் நேர்	–	தேமாங்காய்	
நிரை நேர் நேர்	–	புளிமாங்காய்	காய்ச்சீர்கள் – நான்கு
நிரை நிரை நேர்	–	கருவிளங்காய்	
நேர் நிரை நேர்	–	கூவிளங்காய்	

இவை வெண்பாவிற்கு உரியன ஆதலின் வெண்பா உரிச்சீர் எனவும் கூறுவர்.

கனிச்சீர் : நான்கு

நேர் நேர் நிரை	–	தேமாங்கனி	
நிரை நேர் நிரை	–	புளிமாங்கனி	கனிச்சீர்கள் – நான்கு
நிரை நிரை நிரை	–	கருவிளங்கனி	
நேர் நிரை நிரை	–	கூவிளங்கனி	

இவை வஞ்சிப்பாவிற்கு உரியதால், வஞ்சியுரிச்சீர் எனவும் கூறுவர்.

நாலசைச்சீர் : பதினாறு

மூவசைச்சீர் எட்டுடன் நேரசை, நிரையசைகளைத் தனித்தனியாகச் சேர்த்தால் நாலசைச்சீர் பதினாறு கிடைக்கும். இதனைப் பொதுச்சீர் எனக் கூறுவர்.

4. தளை :

நின்ற சீரின் ஈற்றசையும் வரும்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவது தளை எனப்படும். (தளை – கட்டுதல்)

ஒன்றி வருதலாவது : நேர் முன் நேரும், நிரை முன் நிரையும் வருதல்

ஒன்றாமல் வருதலாவது : நேர் முன் நிரையும், நிரை முன் நேரும் வருதல்.

(எ–டு) கண்/ணா மன்/னா
நேர் நேர் நேர் நேர் – நேர் அசைகள் ஒன்றி வந்தன.
உயர் /வற உயர்/நலம்
நிரை நிரை நிரை நிரை – நிரை அசைகள் ஒன்றி வந்தன.

அக/ர முத/ல
நிரை நேர் நிரை நேர்
மலர்/மிசை ஏ/கினான்
நிரை நிரை நேர் நிரை
– இவை அசைகள் ஒன்றாமல் வந்தன.

தளை ஏழு வகைப்படும். அவை:

1. நேரொன்றாசிரியத்தளை
2. நிரையொன்றாசிரியத்தளை
3. இயற்சீர் வெண்டளை
4. வெண்சீர் வெண்டளை
5. கலித்தளை
6. ஒன்றிய வஞ்சித்தளை
7. ஒன்றாத வஞ்சித்தளை

1. நேரொன்றாசிரியத்தளை

மா முன் நேர் வருவது நேரொன்றாசிரியத்தளை.

(எ–டு) பா / ரி பா / ரி

நேர் நேர் நேர் நேர் மா முன் நேர்

தேமா தேமா

நேர் – நேர் சேர்ந்து வருவதால் நேரொன்றாசிரியத்தளை.

2. நிரையொன்றாசிரியத்தளை

விளம்முன் நிரை வருவது நிரையொன்றாசிரியத்தளை.

(எ–டு) பலர் / புகழ் கபி / லர்

நிரை நிரை நிரை நேர் விளமுன் நிரை

கருவிளம் புளிமா

நிரை–நிரை சேர்ந்து வருவதால் நிரையொன்றாசிரியத்தளை

3. இயற்சீர் வெண்டளை

மா முன் நிரையும், விள முன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளை

(எ–டு) அக/ர முத/ல

நிரைநேர் நிரைநேர் மாமுன் நிரை

புளிமா புளிமா

நில/வரை நீள்/புகழ்

நிரை நிரை நேர் நிரை விளமுன் நேர்

கருவிளம் கூவிளம்

இயற்சீர் வெண்டளை

4. வெண்சீர் வெண்டளை

காய் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை

(எ–டு) யா/தா/னும் நா/டா/மால்

நேர் நேர் நேர் நேர் நேர் நேர் காய்முன் நேர்

தேமாங்காய் தேமாங்காய்

வெண்சீர் வெண்டளை

வெண்பாவிற்கு உரிய தளைகள் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையுமே. வெண்பாவில் இவ்விரு தளைகள் தவிரப் பிற தளைகள் வாரா.

5. கலித்தளை

காய் முன் நிரை வருவது கலித்தளை.

(எ–டு)	தா/மரைப்/பூ	குளத்/தினி/லே....		
	நேர் நிரை நேர்	நிரை நிரை நேர்	காய்முன் நிரை	கலித்தளை
	கூவிளங்காய்	கருவிளங்காய்		

6. ஒன்றிய வஞ்சித்தளை

கனிமுன் நிரை வருவது ஒன்றிய வஞ்சித் தளை.

(எ–டு)	செந்/தா/மரைக்	குளத்/தினி/லே...		
	நேர் நேர் நிரை	நிரை நிரை நேர்	கனிமுன் நிரை	ஒன்றிய வஞ்சித் தளை
	தேமாங்கனி	கருவிளங்கனி		

7. ஒன்றாத வஞ்சித்தளை

கனி முன் நேர் வருவது ஒன்றாத வஞ்சித்தளை.

(எ–டு)	வா/னில்/வளர்	திங்/களன்/ன ...		
	நேர் நேர் நிரை	நேர் நிரை நேர்	கனிமுன் நேர்	ஒன்றாத வஞ்சித் தளை
	தேமாங்கனி	கூவிளங்காய்		

பயிற்சி :

1. பின்வரும் பெயர்களை அசைபிரித்துக் காட்டுக.

அ) தில்லை ஆ) வளவன் இ) இளங்கோ ஈ) தொல்காப்பியர்

2. விடுபட்ட இடங்களை நிரப்புக.

1. அன்/ புநாண்	ஒப்/புர/வு	கண்/ணோட்/டம்
நேர் ____	நேர் ____ நேர்	நேர் நேர் நேர்
கூவிளம்	____________	____________
2. ஆற்/றுவார்	ஆற்/றல்	பணி/தல்
நேர் நிரை	____________	நிரை நேர்
____________	தேமா	____________

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. மெய்யும் ஆய்தமும் யாப்பில் ____________________ எனக் குறிக்கப்படும்.

அ) சுட்டெழுத்து ஆ) வினா எழுத்து இ) ஒற்றெழுத்து

2. காய்ச்சீர் ____________________ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு

3. ஆசிரியப்பாவிற்கு உரிய சீர்கள் ____________ ஆகும்.

அ) காய்ச்சீர் ஆ) மாச்சீர் இ) கனிச்சீர்

4. காய்முன் நேர்வரின் ____________ ஆகும்.

அ) இயற்சீர் வெண்டளை ஆ) வெண்சீர் வெண்டளை இ) கலித்தளை

5. வெண்பாவில் 'உயர்வு' என்னும் ஈற்றுச்சீரில் வரும் ஓரசையின் வாய்பாடு ______

அ) நாள் ஆ) மலர் இ) பிறப்பு

ஆ) குறுவினாக்கள்

1. யாப்புக்குரிய எழுத்துகள் எவையெனக் கணக்கிடப்படுகின்றன?
2. அசை என்றால் என்ன? அவை யாவை?
3. ஈரசைச் சீர்களுக்குரிய வாய்பாடுகள் யாவை?
4. காய்ச்சீர் வாய்பாடுகள் யாவை?
5. தளை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

அறிந்துகொள்வோம்:

வெண்பாவில் இயற்சீரும் வெண்சீரும் மட்டுமே வரும்.

இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும்.

வேற்றுத் தளைகள் வாரா.

ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.

(எ–டு) அலகிடல் : கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

வ.எண்	சீர்	அசை	வாய்பாடு
1	கட/னென்/ப	நிரை நேர் நேர்	புளிமாங்காய்
2	நல்/லவை	நேர் நிரை	கூவிளம்
3	எல்/லாம்	நேர் நேர்	தேமா
4	கட/னறிந்/து	நிரை நிரை நேர்	கருவிளங்காய்
5	சான்/றாண்/மை	நேர் நேர் நேர்	தேமாங்காய்
6	மேற்/கொள்	நேர் நேர்	தேமா
7	பவர்க்/கு	நிரை நேர்	(நிரைபு) பிறப்பு

இக்குறட்பாவில் ஈற்றுச்சீர் பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

வகுப்பறைத்திறன்கள்

அறிதல் திறன் : பாடலைப் படித்து, அதன் மையக் கருத்தினை எழுதுக.

என்னருந் தமிழ்நாட் டின்கண்
எல்லாருங் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்
பராக்கிர மத்தால் அன்பால்
உன்னத இமய மலைபோல்
ஓங்கிடுங் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக்கேட் டிடல்எந் நாளோ ?

மையக்கருத்து : ______________________________

மொழித்திறன் பயிற்சி

பயிற்சி :

அ) பின்வரும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு எழுதுக.

1. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

வ.எண்	சீர்	அசை	வாய்பாடு
1			
2			
3			
4			
5			
6			
7			

பொருத்துக.

11 + 2 = உ௩
4 + 7 = ௩௦
8 + 15 = கரு
20 + 10 = கக
7 + 8 = க௩

கட்டுரைப் பயிற்சி : பெண் கல்வி.

கையெழுத்து இதழ் தயாரித்தல்		
சுற்றுப்புறச்சூழல் சிறப்பிதழ்		
சுற்றுப்புறத்தூய்மை!		சுகாதாரத்தின் மேன்மை!
காடு வளர்ப்பு	துணுக்குகள்	ஓவியம்
மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்	சுற்றுச்சூழல் குறித்த துணுக்குகள்	பூமி வெப்பமயமாதல்
கவிதை	சிறுகதை	உரையாடல்
நீரின்றமையாது உலகு	வெள்ளம் வருமுன் அணை	தேசியப் பசுமைப்படை
கட்டுரை	பழமொழிகள்	நாடகம்
விண்ணின் மழைத்துளி மண்ணின் உயிர்த்துளி	சுற்றுச்சூழல் குறித்தன	வளி மாசும் தீர்க்கும் வழிவகையும்
இத்திங்களுக்குரிய தமிழ்மன்ற நிகழ்ச்சிகள்		

வாழ்க்கைத்திறன்

மன அழுத்தத்தை எதிர்கொள்ளுதல்

மல்லிகாவுக்கு எல்லாமே விளையாட்டுதான். எல்லாவற்றையும் போலவே படிப்பையும் விளையாட்டாக எடுத்துக்கொண்டதன் விளைவு, அரையாண்டுத் தேர்வில் இரண்டு பாடங்களில் மதிப்பெண் குறைந்துவிட்டது. அதற்காக, அவளின் தந்தை மிகவும் கடிந்துகொண்டார். அம்மாவும் அவருடன் சேர்ந்துகொண்டாள்.

அதனால், அவள் அழுதவாறே படுத்துக்கொண்டாள். சிறிது நேரத்திற்குப் பிறகு பெற்றோர் கடிந்துகொண்டதற்குத் தானே காரணம் என்பதனைச் சிந்தித்து உணர்ந்தாள். இனிப், படிப்பில் முழுக்கவனம் செலுத்தவேண்டும் என்னும் பொறுப்பினையும் அறிந்துகொண்டாள்.

மதிப்பெண் குறைந்த பாடங்களில் இனிக் கவனம் செலுத்திப் படிப்பதெனவும் நல்ல மதிப்பெண்கள் பெற்றுப் பெற்றோரிடம் நல்லபெயர் பெறவேண்டும் எனவும் உறுதிபூண்டாள்.

பெற்றோர் கடிந்துகொள்வது நமது நன்மைக்கே என்பதனை அறிந்திருக்கிறீர்களா?

நாம் செய்யும் தவற்றைச் சுட்டிக்காட்டாமல் விடுவோரைவிடக் கடிந்துகொள்வோரும் அறிவுரை கூறுவோரும் நம்மீது அக்கறைகொண்டுள்ளனர் என்பதனை உணர்கிறீர்களா?

பெற்றோர், ஆசிரியர், நண்பர் முதலியோர் கடிவதனையும் அறிவுரை கூறுவதனையும் வெறுப்பாகக் கருதி, மன அழுத்தத்திற்கு ஆட்படாமல், அவை நம் நன்மைக்காகவே எனக் கருதினால், நம் வாழ்வு சிறக்கும்.

மதிப்புக்கல்வி

விடாமுயற்சி

அந்தக் குடும்பத்தில் வறுமை சூழ்ந்திருந்தது. மகனைப் படிக்க வைக்கக்கூட வழியில்லாமல் பெற்றோர் திண்டாடினர். தாயின் வேண்டுகோளின்படி அலுவலகம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தான் மகன். ஆனால், அந்த வேலையில் ஈடுபட அவன் மனம் ஒப்பவில்லை.

தன் தாய்க்கு எழுதிய கடிதத்தில், "அம்மா, நமக்குக் கிடைத்திருப்பது ஒரே ஒரு வாழ்க்கை. அந்த வாழ்க்கையை அலுவலகப் பையனாகவே கழித்துவிட விரும்பவில்லை. எனவே, இந்த வேலையை விட்டுவிடப் போகிறேன்'' என்று எழுதினான்.

பின்னர் அவன், விடாமுயற்சியுடன் வேறு வேலைதேடி பல இடங்களுக்கும் சென்றான். தோல்வியைக் கண்டு துவளவில்லை; அவனுக்கு இலக்கியத்தில் கொஞ்சம் ஆர்வம் இருந்தது; கதைகள் எழுதினான். நாடக ஆசிரியனாக உயர்ந்தான். இலக்கியத்திற்கான மிக உயரிய விருதான நோபெல் பரிசு, அவனைத் தேடி வந்தது. அன்று எடுத்த முடிவு, இன்று அவனை உலகம் முழுவதும் அறிந்தவனாக ஆக்கியது.

இந்தநிலைக்குத் தம்மை உயர்த்திக்கொண்ட அவர் வேறு யாருமல்லர்; அவர்தாம் ஜார்ஜ் பெர்னார்ட் ஷா.

மாணவர்களே! உங்களிடம் இருக்கிறதா விடாமுயற்சி?

உண்டு என்றால் வெற்றி நிச்சயம்.

எண்ணித் துணிக கருமம். – வள்ளுவர்

மொழியாக்கம் செய்க.

Patriotism is the love of the country in which we are born and live and fellow-beings with whom we live in common. It inspires our national and cultural life. It promotes our loyalty to the Government, which protects our country and community and looks after our welfare. Patriotism is thus a source of our social well-being and incentive to noble character. It develops a powerful feeling of common brotherhood, social unity, political independence and national culture.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. The servant of the king is also a king.
   எல்லாரும் இந்நாட்டு மன்னர்.
2. Frost and fraud have foul ends.
   சூதும் வாதும் வேதனை செய்யும்.
3. The place where you find your food is your paradise.
   சோறு கண்ட இடம் சொர்க்கம்.
4. No advice like father's.
   தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
5. When the head is there, the tail should not wag.
   தலையிருக்க வால் ஆடலாமா ?

வஞ்சகமாய நெஞ்சமோடு மொழிதல்

மாயமான வாழ்வைநம்பித்
தேயமெங்குந் தானலைந்தாய்
பேயென்றோதும் மனக்குரங்கின்
பேதலிப்பால் சீர்குலைந்தாய் (மாயமான)

தாயுமேது தந்தையேது
தனையர்சுற்றத் தாருமேது
ஆயும்போது யாவும் பொம்ம
லாட்டமே பூலோகசூது (மாயமான)

நாடுநகர் வீடுசெம்பொன்
நஞ்சைதோட்டம் தன்னைநீயே
மாடும் ஆடும் போலச்சுற்றி
வாஞ்சைபற்றி ஏங்கினாயே (மாயமான)

பாடுபட்டுத் தேடியென்ன
பலனடைந்தாய் பாழ்மனமே
நீடுபக்தி பாஸ்கரன் சொல்
நீதியைநீ கேள்தினமே. (மாயமான)

– மதுரகவி பாஸ்கரதாஸ்

பொருள் : மனமே! நிலையில்லாத மாய வாழ்வை உண்மையென நம்பி உலகமெங்கும் அலைகின்றாய்! குரங்கு, மரத்திற்கு மரம் தாவுவதுபோல நாள்தோறும் எதையெதையோ எண்ணி உனது பெருமைகளை இழக்கிறாய்.

இப்பிறவியில் உன் தந்தை, தாய், உடன்பிறந்தோர் மற்றும் உறவினராக இருப்போர் எல்லாப் பிறவியிலும் அவ்வாறே இருப்பரோ ? இதனை எண்ணிப் பார்த்தால் உறவுகளெல்லாம் பொம்மலாட்டம்போல மாறிமாறி வரும் உறவுகளாகவே உள்ளன.

ஆடுமாடுகள் பசுமையான பகுதிகளையே சுற்றி மேய்வதுபோல நாடு, நகரம், வீடு, பொன், நிலம், தோட்டம் முதலிய சொத்துகளைச் சேர்ப்பதிலேயே எண்ணம் கொண்டு ஏங்குகின்ற மனமே! நிலையில்லாத வாழ்விற்காக இவற்றையெல்லாம் அரும்பாடுபட்டுச் சேர்த்து என்ன பயன் ? அவற்றை நீ எவ்வளவு காலம் கட்டிக்காப்பாய் ? இதனை உணர்வாயாக! பாஸ்கரனாகிய நான் கூறும் அறக்கருத்துகளைக் கேட்டுத் திருந்துவாயாக!

இலக்கணக்குறிப்பு : மனக்குரங்கு – உருவகம்; நாடுநகர் – உம்மைத்தொகை; செம்பொன் – பண்புத்தொகை; மாடும்ஆடும் – எண்ணும்மை.

ஆசிரியர் குறிப்பு : பாஸ்கரதாஸ் மதுரை நகரில் பிறந்தவர். இவர், இனிய இசையமைப்பால் புதிய பல இசையுருக்களை அமைத்தவர்; இசைப்புலமையுடன் நாடகப்புலமையும் பெற்றவர்; நாடக மேடைகளில் விடுதலைப் பாடல்களை இசைத்தவர். இவரின் இசைப்பாடல்களைக் கேட்ட காந்தியடிகள், இவரைப் பெரிதும் பாராட்டினார். இவரைச் சிறப்பிக்கும்வகையில் மதுரையில் இவர் வாழ்ந்த பகுதிக்கு மதுரகவி பாஸ்கரதாஸ் நகர் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவரின் காலம் கி.பி. 1892முதல் 1952வரையாகும்.

பாடப்பகுதியிலுள்ள பாடல் மதுரகவி பாஸ்கரதாஸ் கீர்த்தனைகளின் இரண்டாம் பாகத்தில் இடம் பெற்றுள்ளது.

ஒப்படைப்பு : திருவிளையாடற் புராணத்தில் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலக் கதையைப் பொம்மலாட்டமாக வடிவமைத்து வகுப்பில் நடத்திக் காட்டுக.

மாதிரி வினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. பாஸ்கரதாஸ் – குறிப்பு எழுதுக.
2. பாஸ்கரதாஸ், மனத்தைக் குரங்கெனக் கூறுவதேன் ?
3. பொம்மலாட்டமென எதனைப் பாஸ்கரதாஸ் குறிப்பிடுகிறார் ?
4. மனம் எதற்காக ஏங்குகிறது எனப் பாஸ்கரதாஸ் கூறுகிறார் ?

ஆ) சிறுவினா

பாஸ்கரதாஸ், தன் மனத்திடம் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

இரட்சணிய யாத்திரிகம்

– எச்.ஏ. கிருட்டினனார்

இரட்சணிய சரிதப் படலம்

சிலுவைப் பாடு

முன்கதைச் சுருக்கம்

இறை மகனாகிய இயேசுபெருமான் பெத்தலகேமில் மரியன்னைக்கு மகனாகப் பிறந்தார். குழந்தை இயேசுவை, ஏரோது மன்னனின் கொடுமையிலிருந்து காப்பாற்றும் பொருட்டுத், தந்தையாகிய சோசப்பும் தாய் மரியன்னையும் குழந்தையோடு எகிப்துக்குச் சென்றனர். ஏரோதுவின் இறப்புக்குப் பின்னர், அவர்கள் இசுரேலுக்குப் பக்கத்திலுள்ள நாசரேத்திற்கு வந்தனர். இயேசு, யூதேய காட்டிலிருந்த புனித யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். அவர் பல்வேறு புதுமைகளைப் புரிந்தார்; மக்களுக்கு ஞானத்தை ஊட்டினார். அவர் பன்னிரு சீடர்களைக் கொண்டிருந்தார். பன்னிரு சீடர்களுக்கும் அறிவுரையும் கட்டளையும் வழங்கினார்.

இயேசுவின் புகழ் மேன்மேலும் பரவியது. பொறாமை கொண்டவர்களின் சூழ்ச்சியில் சிக்கிய யூதாசு என்னும் சீடர் இயேசுவைக் காட்டிக் கொடுத்தார். இயேசு, யூதேய மரபுகளை மீறினார் எனப் பொய்க் குற்றஞ் சாட்டி, பிலாத்து மன்னன் மரணதண்டனை விதித்தான். கொலையாளிகள் இயேசுவின் தோள்களில் சிலுவையினைச் சுமத்தித் துன்புறுத்திக் கல்வாரிமலைக்குக் கொண்டு சேர்த்தனர்.

யூதர்கள் இயேசுநாதரைச் சிலுவையில் அறைதல்

1. ஈண்டினியான் புகல்வதென்ன ? எம்பெருமான் திருமேனி
தீண்டினார்; சிலுவையொடு சேர்த்தினர்; செங்கையிலும்
காண்டகுசே வடியிலும்வெவ் விருப்பாணி கடாவினர்;
நீண்டசிலு வையையெடுத்து நிறுத்தினார் நிலங்கீண்டு.

பொருள்: யூதர்கள், இயேசுநாதரின் இருகைகளிலும் கால்களிலும் கூர்மையான இரும்பாணிகளை வைத்துச் சிலுவையோடு சேர்த்து அறைந்தனர்; பின்னர், அச்சிலுவையை நிலத்தைத் தோண்டி நிறுத்தினர்.

சொற்பொருள்: ஈண்டு – இவ்விடம்; புகல்வது – சொல்வது; காண்டகு – காணத்தக்க; இருப்பாணி – இரும்பு ஆணி; கடாவினார் – அடித்தார்; கீண்டு – தோண்டி.

இலக்கணக் குறிப்பு: செங்கை, சேவடி, வெவ்விருப்பு – பண்புத்தொகைகள்; இருப்பு – வலித்தல் விகாரம்.

பகுபத உறுப்பிலக்கணம் : தீண்டினார் – தீண்டு + இன் + ஆர்; தீண்டு – பகுதி, இன் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி. கடாவினார் – கடாவு + இன் + ஆர்; கடாவு – பகுதி, இன்– இறந்தகால இடைநிலை, ஆர்– பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல்: ஈண்டினியான் – ஈண்டு + இனி + யான்; காண்டகு – காண் + தகு; சேவடி – செம்மை + அடி; வெவ்விருப்பாணி – வெம்மை + இரும்பு + ஆணி.

குற்றவாளிகளின் நடுவே இயேசுநாதர்

2. மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்தும் இடப்புறத்தும்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயலொழியச்
சொற்றமறைத் திருவசனம் துலக்கமுறச் சுருதிமுதல்
குற்றவா ளிகளோடு நடுநின்றார் குருசுமிசை.

பொருள்: யூதர்கள் சினத்தோடு இரு திருடர்களைச் சிலுவையில் ஏற்றியிருந்தனர்; அக்குற்றவாளிகளின் நடுவே மறை முதல்வராகிய இயேசுவை நிறுத்தினர்.

சொற்பொருள்: செற்றம் – சினம்; குருசு – சிலுவை; சொற்ற – சொன்ன; துளக்கம் – விளக்கம்; சுருதிமுதல் – மறை முதல்வராகிய இயேசுநாதர்.

பிரித்தறிதல்: மற்றிரண்டு – மற்று + இரண்டு; குருசேற்றி – குருசு + ஏற்றி.

இன்னா செய்தார்க்கு இனியவே செய்தல்

3. தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்!
இன்னதென அறிகில்லார் தாம்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல். *

பொருள்: இயேசுவின் திருவுடலைச் சிலுவையில் அறைந்ததும், அவர் உடல் சொல்லுதற்கரிய பெருந்துன்புற்றது, மனமோ பதைபதைத்தது; இருப்பினும் இயேசு, “என் தந்தையே! இவர்கள், தாங்கள் செய்வது இன்னதென அறியாமல் செய்கிறார்கள்; இவர்தம் பிழையை மன்னித்தருள்வீராக!” என்று வேண்டினார்.

சொற்பொருள்: சதைப்புண்டு – சிதைக்கப்பட்டு; பன்னரிய–சொல்லுதற்கரிய; பலபாடு– பல துன்பம்.

இலக்கணக் குறிப்பு: கனிவாய் – உவமைத்தொகை.

பிரித்தறிதல்: தன்னரிய – தன் + அரிய; தவிப்பெய்தி – தவிப்பு + எய்தி.

உண்மைக் கிறித்தவர்

4. இத்தகைய இரும்பொறையும் மனநலமும் இயைந்தவரே
வித்தகனுக் கடித்தொழும்பர் எனத்தகுமெய்க் கிறிஸ்தவர்மற்
றித்தகைய குணமிலரும் கிறிஸ்தவரென் றிசைபெறுதல்
செத்தவரைத் துஞ்சினவர் எனவுரைக்கும் சீர்மைத்தால்.

பொருள்: தமக்குத் துன்பம் செய்தவரையும் பொறுத்தருளும் பெருங்குணம் உடையவரே ஆண்டவனின் அடியாராவர். அத்தகையோரே உண்மைக் கிறித்தவராவர். இக்குணம் இல்லாதோர் உண்மைக் கிறித்தவர் ஆகார்.

சொற்பொருள்: இரும்பொறை – பெரும் பொறுமை; வித்தகன் – ஆண்டவன்; தொழும்பர் – அடியார்; இசைபெறுதல் – புகழ்பெறுதல்; துஞ்சினவர் – உறங்கியவர்.

பிரித்தறிதல்: இத்தகைய – இ + தகைய; மனநலம் – மனம் + நலம்.

உலக இரட்சகர் இயேசுநாதர்

5. கீண்டிருப்பு முளையுடலைக் கிழித்துருவி வதைப்புண்டு
மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியுமென் றுரைத்தமொழி
ஈண்டிவரே உலகினுக்கோர் இரட்சகரென் றெடுத்துரைக்கும்;
வேண்டுமோ இனிச்சான்றும் இதைவிடுத்து வேறொன்றே ?

பொருள்: இரும்பு ஆணிகளால் உடலைக் கிழித்துச் சிதைத்தபோதும், இச்செயலைச் செய்தோரை மன்னித்தருளும் ஆண்டவரே என வேண்டிய இயேசுவே உலகைக் காக்க வந்த பெருமானாவார். பகைவர்க்கும் அருளிய இவ்வுயிரிரக்கப் பண்பு ஒன்றே இவர் இவ்வுலகைக் காக்க வந்தவர் என்பதற்குப் போதுமான சான்றாகும்.

சொற்பொருள்: கீண்டு –பிளந்து; இருப்புமுளை – ஆணியின் நுனி; வதைப்புண்டு – துன்பமடைந்து; மாண்டுபடும்போது – இறக்கும்நிலையில்; இரட்சகர் – காப்பவர்.

பிரித்தறிதல்: இருப்புமுளை – இரும்பு + முளை; ஈண்டிவரே – ஈண்டு + இவரே; எடுத்துரைக்கும் – எடுத்து + உரைக்கும்.

யூதர்கள் இழிசொற்களைச் சிலுவையில் எழுதுதல்

6. மன்றாடும் அருட்சீவ வசனத்தை வன்மறவோர்
ஒன்றாகப் பொருள்செய்யார் உடைகளைந்து பங்கிட்டார்;
குன்றாத நசரேயன் யூதருக்குக் குலவேந்தன்
என்றாக டியமான எழுத்திட்டார் சிலுவைமிசை.

பொருள்: யூதர்கள் இயேசுவின் அருள்மொழிகளைப் பொருட்படுத்தாமல், “குன்றாத நசரேயன் யூதருக்குக் குலவேந்தன்” என்னும் ஏளன மொழிகளைச் சிலுவையில் எழுதினர்; அதன்பின்னர் அவர்தம் உடைகளைக் களைந்து பங்கிட்டுக்கொண்டனர்.

சொற்பொருள்: மன்றாடும் – மிக வேண்டுதல்; ஆகடியம் – ஏளனம்.

இலக்கணக்குறிப்பு: வன்மறவோர் – பண்புத்தொகை.

பிரித்தறிதல்: பங்கிட்டார் – பங்கு + இட்டார்; எழுத்திட்டார் – எழுத்து + இட்டார்; என்றாகடியமான – என்று + ஆகடியம் + ஆன.

ஆசிரியர் குறிப்பு: இரட்சணிய யாத்திரிக நூலாசிரியர் எச்.ஏ. கிருட்டினனார், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கரையிருப்பு என்னும் ஊரில், 1827 ஏப்பிரல் இருபத்து மூன்றாம் நாள் பிறந்தார். இவருடைய தந்தை சங்கரநாராயணர் பெரும்புலவராக விளங்கினார். அன்னையார் பெயர் தெய்வநாயகி அம்மாள். இவர்கள் ரெட்டியாபட்டியில் வாழ்ந்தவர்கள். பிறகு, கரையிருப்பு சென்று வாழ்ந்த கிருட்டினனார், முப்பதாவது அகவையில் தம்பெயரை எச்.ஏ. கிருட்டினனார் என வைத்துக்கொண்டார்.

கிருட்டினனார் தந்தையிடம் தமிழிலக்கியங்களையும் மாணிக்க வாசகத்தேவரிடம் இலக்கணங்களையும், பிலவணச் சோதிடரிடம் வடமொழியையும் கற்றார். சாயர்புரம் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணியக்குறள் என்னும் நூல்களையும் இயற்றினார். கிறித்தவக் கம்பர் எனப் புகழப்பெற்ற பெருங்கவிஞர் 1900 பிப்ரவரி மூன்றாம் நாள் இயற்கை எய்தினார்.

நூற்குறிப்பு: இரட்சணியயாத்திரிகம் என்பதன் பொருள் (உயிர், தன்னைக் காக்க வேண்டி) இறைவனை நோக்கிச் செல்லும் பயணம் என்பது. ஆன்ம ஈடேற்றத்தை விரும்புபவர் என்பதும் பொருந்தும்.

ஜான் பன்யன் என்னும் புகழ்பெற்ற ஆங்கில நூலாசிரியர் இயற்றிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்னும் நூலைத்தழுவி, ஹென்றி ஆல்பர்ட்டு கிருட்டினனார் வழிநூலாகத் தமிழில் இரட்சணிய யாத்திரிகம் என்னும் பெயரில் இயற்றினார்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. உரிய எழுத்தைக் கொண்டு நிரப்புக.

   1. குன்றாத நச – யன் யூத – க்குக் குலவேந்தன். (ரே, றே; ரு,று)
   2. மற்றிர – டு திருட – யும் வ – ப்புறத்தும் இடப்புறத்தும் (ண், ன்; ரை, றை; ல, ள)

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

   1. கிறித்தவக் கம்பர் எனப் புகழப்பெறுபவர் ________________
   2. இரட்சணிய யாத்திரிகம் ________________ நூலைத் தழுவி இயற்றப்பட்டது.

3. சொல்லைப் பொருளோடு பொருத்துக.

   குருசு – ஏளனம்

   தொழும்பர் – சிலுவை

   ஆகடியம்– சினம்

   செற்றம் – அடியார்

4. இடஞ்சுட்டி விளக்குக.

   1. குற்றவா ளிகளோடு நடுநின்றார் குருசுமிசை.
   2. குன்றாத நசரேயன் யூதருக்குக் குலவேந்தன்

ஆ) குறு வினாக்கள்

1. இரட்சணிய யாத்திரிகம் – பொருள் எழுதுக.
2. எச்.ஏ. கிருட்டினனார் எழுதிய வேறு நூல்கள் யாவை ?

இ) சிறு வினாக்கள்

1. எச்.ஏ. கிருட்டினனார் பற்றிக் குறிப்பெழுதுக.
2. இயேசுநாதரின் அருள்திறனை எழுதுக.

ஈ) நெடு வினா

சிலுவைப்பாடு என்னும் பகுதியிலுள்ள கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

பொங்கல் திருவிழா

(வானொலி உரைச்சித்திரம்)

"தைபொறந்தா வழி பொறக்கும்
தங்கமே தங்கம்....."

அடடா !...

மக்களின் மனங்களில்தாம் எவ்வளவு பெருமிதம்; எவ்வளவு மகிழ்ச்சி!

எங்குப் பார்த்தாலும் வளமை!

பெண்களோடு போட்டிபோட்டுக்கொண்டு 'பளிச்' சென்று தம்மையும் அழகுபடுத்திக் கொண்ட வீடுகள். வீடுகள்தோறும் மங்கல வரவேற்புக் கூறிட அணிவகுக்கும் மாவிலைத் தோரணங்கள்!

இன்று தமிழர் திருநாளாம் பொங்கல் விழா; தைத்திங்கள் நாள்விழா; தமிழினத்தின் தனிவிழா; பண்பாட்டுப் பெருவிழா.

இந்த மகிழ்ச்சி வெள்ளத்துக்குக் காரணம் இதுதானா!. ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கிறது! அனைவர் முகத்திலும் மகிழ்ச்சிப் பொங்கல் பூத்துக் குலுங்குகிறது.

மனிதகுலத்தின் உழைப்பின் மேன்மையைப் பயன்வடிவில் மக்களெல்லாம் ஒன்றுகூடித் துய்த்து இன்புறுகின்ற இணையில்லாத் திருநாள்தான் பொங்கல்! பழைமைகளைப் பக்குவமாய் வழியனுப்பிவிட்டு, வளர்ச்சிக்கு வளமை கூட்டும் புதுவரவுகளுக்கு மலர்ச்சியோடு மக்கள்தம் மனத்தால் வரவேற்பு இசைத்திடும் வண்ணத்திருநாள்தான் பொங்கல்.

உலகின் உயரிய வாழ்வுக்கு அச்சாணியாய், மூல ஒளியாய்த் திகழ்கின்ற எழுகதிரைப் போற்றி வணங்குகின்ற உயிர்ப்புள்ள திருநாள்தான் பொங்கல். மக்கள் மனங்களில் நிறைந்திருக்கின்ற அன்புப்பெருக்கம், நன்றிகாட்டல், பொதுமை நாட்டம், இயற்கை போற்றல், சிற்றுயிர் காத்தல், புதுமை வேட்டல், இன்பம் கூட்டல் முதலிய உணர்வுகள் ஒட்டுமொத்தமாகப் பொங்கிப் பெருகிடும் பொன்விழாவே பொங்கல் நன்னாள்!

வளமையின் அடையாளமே அறுவடைக்காலம்! நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த உழுது, பண்படுத்தி, ஆடிப்பட்டம் தேடி விதைப்பவர்கள் சிற்றூர்வாழ் பெருமக்கள்! அவர்களின் உழைப்பின் பயனே இத்திருநாள்.

போ(க்)கித் திருநாள்

> பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே.

என்னும் நன்மொழிக்கு விளக்கமாய்ப் போகித்திருநாள் திகழ்கிறது! வீடும் நாடும் தூய்மைப்படுகிற, சுற்றுப்புறச்சூழலைப் போற்றுகின்ற இனிய திருநாளே போகி.

பொங்கல் திருநாள்

பெரும்பொங்கல் என்றழைக்கப்படும் பொங்கல் திருநாளன்று பெரியவர்களும் சிறியவர்களும் விடியற்காலையில் எழுந்து நீராடிப் புத்தாடைகள் அணிவர்.

உலக நடுக்கோட்டிற்கு வடக்கே வாழ்ந்துவரும் மக்களுக்கு வாடையின் வாட்டத்தைப் போக்கித் தென்றலின் இன்பத்தைப் பரிசாகத் தந்திடும் வேனிற்கால விடியலுக்கு இந்நாளே நன்னாள்.

இதோ, பொங்கல் நெருங்கிவிட்டது. பொங்கல்விழாவின் இனிய நாயகனாம் கதிரவனுக்குப் படையலிடப் பொங்கலுடன் வெற்றிலை, பாக்கு, தேங்காய் மற்றும் முக்கனி களுடன் இஞ்சியும் மஞ்சளும், கரும்பும் ஞாயிற்றுக்கு ஏற்ற அறுகம்புல்லும், பூசணியும் முதன்மையான இடம் பெறுகின்றன.

> காயுடை நெல்லொடு கரும்பு அமைத்துக்
> கட்டி அரிசி அவல் அமைத்து
> வாயுடை மறையவர் மந்திரத்தால்
> ... ... வணங்குகின்றேன்.

என்று பாடி வணங்கிடும் ஆண்டாளின் மனநிலை கொண்டவர்களாய் ஒவ்வொருவரும் பக்தி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அனைவரும் கூடிப் பொங்கலோ பொங்கல் என முழங்கி நெஞ்சில் நன்றியும் நேயமும் பொங்க விடியல் நாயகனைத் தொழுது வணங்குகின்றனர்.

மாட்டுப்பொங்கல்

பொங்கலுக்கு அடுத்த நாளான மாட்டுப்பொங்கல் உழவுக்கு உறுதுணையான மாடுகளை நன்றியுணர்வோடு மதித்துப் போற்றிடும் திருநாளாகத் திகழ்கிறது.

பாலைப் பொழிந்து தரும் பாப்பா – அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
....
வயலில் உழுது வரும் மாடு ...
.... – இதை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!

இது, பாரதி காட்டும் நன்றியுணர்வுக்கான பாடல். இந்நன்றியுணர்வே மாட்டுப்பொங்கலாக மலரக் காண்கிறோம். இந்நாளில் உழவர்கள் தம் பெருஞ்செல்வமாகக் கருதும் மாடுகளைக் குளிப்பாட்டி, வண்ணப்பொடிகளால் அழகுபடுத்திக் கழுத்தில் சலங்கைகட்டிக் கொம்பிலும் நெற்றியிலும் மஞ்சள்பூசிக் குங்குமப்பொட்டு வைத்துப் பொங்கலிட்டு வணங்குவர்.

பச்சரிசிக் கோலமிட்டுப் புதுப்பானை வைத்துப் பொலிவு பெற அதனை மஞ்சள் இஞ்சியால் அலங்கரித்துச் செந்நெல் அரிசியும் செங்கரும்பின் சாற்றையும் கூட்டிப் படைக்கும் பொங்கலுக்கு இணையான உணவுமுண்டோ? பெரியவரும் சிறியவரும் சுற்றி நின்று பொங்கி வரும்போது பொங்கலோ பொங்கல், பொலியோ பொலி என்றெழுப்பும் உற்சாகக் குரலுக்கு இணையான இன்ப இசைதான் உண்டோ!

உலகில் தோன்றிய தொன்மைக்குடிகள் தமிழர்களே. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஓரிடத்தில் நிலைத்து உழவுத்தொழில் செய்து, பண்பட்ட நாகரிக வாழ்வை மேற்கொண்டவர்கள் தமிழர்கள். அவ்வுழவுத்தொழில் நாகரிகத்தின் அடையாளச் சின்னமாக இன்றும் திகழ்ந்து, பண்டைய மரபையும் பண்பாட்டையும் பறைசாற்றி நிற்பதுதான் உழவர் திருவிழா. இந்நன்னாளின் பழைமைச் சிறப்பை நோக்கித் தமிழர் திருநாள் என இன்றும் போற்றப்படுகிறது.



சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. – குறள், 1031

என்னும் வள்ளுவத்திற்கேற்பச் சிற்றூர்கள் நிறைந்த நம்நாட்டில் உழவுக்கும், உழவர்க்கும் பெருமை சேர்க்கும் விழா பொங்கல்விழா எனக் கூறுதல் பொருந்தும்.

மாட்டுப்பொங்கலைத் தொடர்ந்து, எருதுவிடும் திருவிழா நடைபெறும். இவ்விழா மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களில் மஞ்சுவிரட்டு, சல்லிக்கட்டு எனவும், தமிழ்நாட்டு வடமாவட்டங்களில் எருதுகட்டு என்றும் வழங்கப்பட்டுத் தொன்றுதொட்டு மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்ற விழாவாகத் திகழ்கிறது. இது, தமிழரின் வீரத்தை வெளிப்படுத்தும் விழாவாகும்.

பண்டைத் தமிழர் இந்நிகழ்வை ஏறுதழுவுதல் என்றழைத்தனர். ஏறு தழுவி வெற்றி பெற்ற ஆடவரையே அக்காலக் கன்னிப்பெண்கள் விரும்பி மணப்பர் என்பது மாட்டுப்பொங்கலின் மரபு தந்திடும் பெருமைச் செய்தி.

காணும் பொங்கல்

பொங்கலுக்கு மூன்றாம் நாள் காணும் பொங்கல். நம்மைச் சுற்றியுள்ள மக்களை, பெரியவர்களை, உறவினர்களை, நண்பர்களை அவர்தம் இல்லம் சென்று வணங்கி அன்பொழுக உரையாடி மகிழ்தலே இத்திருநாளின் நோக்கம்.

மண்ணின் மணத்தை உணர்த்தவல்ல கும்மி, கோலாட்டம் முதலிய நாட்டுப்புறக்கலைகள் இளம்பெண்டிரின் ஆடல், பாடல்களின்மூலம் உயிர்ப்புப் பெறுவது இந்நாளில் சிற்றூர்கள் தந்திடும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்யும் திருநாள்
வீணில் உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்யும் பெருநாள்
இயற்கையைப் போற்றும்
இனிய திருநாளாக
மனித குலத்தின்
மாண்புகளுக்கு மங்கலம் கூறும்
பொங்கல் நாளில்
பொங்குக பொங்கல்
எங்கும் தங்குக
அன்பும் நலனும்!

ஆந்திரா, கருநாடகா ஆகிய மாநிலங்களில் மகர சங்கராந்தி எனவும் ஜப்பான், ஜாவா முதலிய நாடுகளில் அறுவடைத் திருவிழா எனவும் கொண்டாடப்படுகிறது.

தமிழகம் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, மொரீசியசு, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற கடல்கடந்த நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது

குறிப்பு: வானொலி உரைச்சித்திரம் என்பது, குறித்த தலைப்பில் ஒரு நிகழ்வையோ செய்தியையோ உரையாக எழுதிக், கேட்போர் விரும்பும்வண்ணம் குரலேற்றத்தாழ்வுடன் வானொலியில் உரையாற்றுதல்.

மாதிரிவினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. வானொலி உரைச்சித்திரம் என்றால் என்ன?
2. மக்களின் மனங்களில் பெருமிதம் பொங்கக் காரணம் என்ன?
3. பொங்கல் விழாவைத் தமிழர் திருநாள் எனப் போற்றுவது ஏன்?
4. காணும் பொங்கல் – பெயர்க்காரணம் கூறுக.

ஆ) சிறுவினாக்கள்

1. பொங்கல் கொண்டாடும் முறையை விளக்குக.
2. ஏறு தழுவுதல் பற்றி எழுதுக.
3. மாட்டுப்பொங்கல் எவ்வாறு கொண்டாடப்படுகிறது?

இ) நெடுவினா

தமிழர் திருநாளின் சிறப்புகளை விவரிக்க.

குழுக் கலந்துரையாடல்

விழாக்கள் கொண்டாடுவதன் நோக்கங்களைக் குழுவாகக் கலந்துரையாடுக.

நேர்மை

அம்மா கொடுத்த ரூபாய் நோட்டுகளை எண்ணிப் பார்த்தான் முருகன்; பதினைந்து ரூபாய் இருந்தது.

"இது போதுமா அம்மா?" என்று ஐயத்துடன் கேட்டான், முருகன்.

"போதுமடா கண்ணு. சாதாரணச் சட்டைத் துணியாக எடுத்துக்கொண்டால் போதும். நான், நம் சீனு மாமாவிடம் சொல்லியிருக்கிறேன். அவர் வேலை பார்க்கிற துணிக்கடைக்குப் போ. அவரே உனக்கு எடுத்துக் கொடுப்பார். எனக்கு வர நேரமில்லை. இப்போது நான் மருத்துவர் வீட்டுக்கு வேலைக்குப் போகவேண்டும்" என்றாள் அம்மா.

முருகன், அந்த ரூபாய் நோட்டுகளை மடித்துத் தன் சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்டான். அவன் சட்டையிலும் கால் சட்டையிலும் ஆங்காங்கே நைந்து போயிருந்தது. அந்தச் சட்டைகளை அடித்துத் துவைக்கவே முடியாது. பஞ்சுப் பஞ்சாகப் போய்விடும். மிகவும் கவனமாகத்தான் துவைக்கவேண்டும். அப்படிக் கவனமாகத் துவைக்க அவன் அம்மாவுக்குத்தான் தெரியும்.

பள்ளிக்கூடத்தில் மற்ற மாணவர்கள் ஓடி ஆடி விளையாடும்போது, முருகன் கெட்டிக்காரத்தனமாக ஒதுங்கிக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், விளையாட்டு முனைப்பில் அவனுடைய சட்டையின் கதி என்னவாகும் என்று சொல்ல வேண்டியதில்லை.

சட்டையில் போடவேண்டிய ஒட்டுக்களையெல்லாம் போட்டாகிவிட்டது. மரவட்டை மாதிரிச் சுருட்டிச் சுருட்டித் தைத்தும் ஆகிவிட்டது. இனிமேலும் முடியாது என்ற நிலைமையில்தான் புதுச்சட்டை தைக்கும் முயற்சியில் இறங்கினாள், அம்மா.

பாவம், அவள்தான் என்ன செய்வாள்? அவர்கள் இருவரையும் தவிக்க விட்டுவிட்டுத்தான் அப்பா செத்துப் போய்விட்டாரே. அம்மா, ஏதோ நாலைந்து வீடுகளில் வேலை செய்வதன்மூலம் ஒருவழியாகக் காலம் தள்ள முடிகிறது. இந்தப் பதினைந்து ரூபாய் சேர்ப்பதற்குள் உன்பாடு என்பாடு என்றாகிவிட்டது.

ஆனாலும், அவன் கடினப்பட்டுப் படித்து முன்னுக்கு வந்துவிடுவான் என்னும் நம்பிக்கையுடன் அவள் இருந்தாள்.

சட்டைப் பையைத் தொட்டுத்தொட்டுப் பார்த்துக்கொண்டே துணிக்கடைக்கு நடந்தான் முருகன். சாலை ஓரம், ஓரிடத்தில் ஒரே கும்பல். 'பம்...பம்' என்று உடுக்கை சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

'வாங்கோ சாமி, வாங்கோ... நீங்க நினைக்கிறதெல்லாம் நடக்கும். இந்தத் தாயத்து ஒண்ணு வாங்கிக் கட்டிக்குங்கோ! நற்பேறு உங்களைத் தேடிவரும்!" என்ற குரல் பலமாகக் கேட்டது.

'ஓகோ, தாயத்து விற்கிறவன்!'

“இந்தத் தாயத்தைக் கட்டிக்கிட்டா, உங்க வறுமை நீங்கும். திருப்தியான நல்ல சாப்பாடு கிடைக்கும். நல்ல துணிமணிங்க கிடைக்கும்...”

முருகன் உள்ளே எட்டிப் பார்த்தான்.

“இந்த ஒரு ரூபாய் செலவைப் பாக்காதீங்க சாமி. இந்த ஒரு தாயத்தாலே உங்களுக்கு ஒரு வேலை கிடைக்கும். வேலையிலே இருக்கிறவங்களுக்கு, மேல் பதவி கிடைக்கும்...”

கும்பலில் சிலர் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

“பொய் இல்லே சாமி, நிஜம்தான். படிக்கிற பையன்கள் இதைக் கட்டிக்கிட்டா, பரீட்சையக் கூடச் சுலபமா எழுதிப் பாஸ் பண்ணிடலாம்!” என்றான், தாயத்து விற்கிறவன்.

சின்னப் பையன்கள் கைதட்டினார்கள்.

உடுக்கைச் சத்தம்.

அங்கே இருந்த குறும்புக்காரச் சிறுவன் ஒருவன், “தாயத்து விற்கிறவரே, முதல்லே நீங்க ஒரு தாயத்துக் கட்டிக்குங்க, தாயத்தெல்லாம் நல்லா விற்கும்” என்றான்.

மீண்டும் எல்லாரும் சிரித்தார்கள்.

முருகன் சிரித்துக்கொண்டே, கும்பலிலிருந்து வெளியேறினான்; கடைக்கு நடந்தான். அம்மாவிடம் இதைப் பற்றியெல்லாம் சொல்லவேண்டும் என்று நினைத்துக்கொண்டான்.

சிறிது தொலைவு போன முருகன், சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தான், ‘பகீர்’ என்றது. பையிலிருந்த ரூபாய் நோட்டுக்களைக் காணோம்!

‘ஐயோ, தாயத்து விற்பவனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தபோது எவனோ திருடிவிட்டானே!’

முருகனுக்கு ‘குப்’ பென்று வியர்த்துவிட்டது. உடம்பு கிடுகிடுவென்று ஆடியது கண்களில் நீர் வழிந்தது.

‘அம்மா எவ்வளவு கடினப்பட்டுப் பணத்தைச் சேர்த்துக் கொடுத்தாள்! நான், வேடிக்கை பார்க்கப் போய்ப் பணத்தைப் பறிகொடுத்துவிட்டேனே!’ என்று கலங்கினான்.

திரும்பிப் போய்ப் பார்த்தான். அங்கே தாயத்து விற்கிறவனையும் காணோம், கும்பலையும் காணோம்!

முருகனுக்கு அழுகை அழுகையாக வந்தது. புதுச்சட்டை தைத்துக் கொள்ளலாம் என்று அவன் எவ்வளவு ஆசையாக இருந்தான்!

'என்னுடைய இந்தக் கிழிந்த சட்டையைப் பார்த்த பிறகும் பணத்தைத் திருடியிருக்கிறானே; அவன் மனம் கல்லா, இரும்பா? வீட்டுக்குப் போய் அம்மாவிடம் என்ன சொல்லுவது?' என்று தனக்குள் புலம்பினான் முருகன்.

அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. சாலை ஓரமாக இருந்த அரசமரத்தின் மேடையில் சோர்வுடன் உட்கார்ந்தான். அங்கே இருந்த பிள்ளையாரைக் கலக்கத்துடன் பார்த்தான்.

நேரமாகிக்கொண்டு வந்தது.

அப்போது, அரசமரத்து வேரின் இடுக்கில், என்னவோ ஒரு காகிதப் பொட்டலம் கிடப்பது தெரிந்தது. அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தான் முருகன். அதில் முப்பது ரூபாய் இருந்தது!

அவன் பறிகொடுத்தது பதினைந்து ரூபாய். இப்போது கிடைத்திருப்பது முப்பது ரூபாய். 'ஒன்றுக்கு இரண்டு மடங்காகக் கிடைத்திருக்கிறதே என்று நினைத்தான் அவன்.

ஆனால், சட்டென்று அவன் மனத்தில் ஓர் உறுத்தல். 'சே! சிறிது நேரத்திற்குள் என்ன அற்பமான ஆசை வந்துவிட்டது! பாவம் யார் பணமோ? அவர்கள் எதற்கு வைத்திருந் தார்களோ? அதைப்போய் எப்படி என்னுடையதாக்கிக் கொள்ள நினைக்கலாம்?' என்று தன்னைத்தானே திட்டிக்கொண்டான்.

யாராவது தேடிக்கொண்டு வருகிறார்களா என்று நெடுநேரம் உட்கார்ந்திருந்தான்; தேடிக்கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்தான்.

ஒல்லியான ஒருவர் பரக்கப் பரக்க அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே வந்தார்.

"தம்பி, தம்பி, இங்கே ஏதாவது காகிதப் பொட்டலம் கிடந்ததா? நீ பார்த்தாயா? அதிலே முப்பது ரூபாய் பணம் வைத்திருந்தேன். என் மனைவிக்கு உடம்பு சரியில்லை. மருந்து வாங்கப் பணம்கொண்டு வந்தேன். சாமியைக் கும்பிட்டுவிட்டுப் போகலாம் என்று இங்கே வந்தேன். ஒருவேளை, இங்கே மடியிலிருந்து விழுந்திருக்கலாம் என்று தோன்றுகிறது!" என்றார் அவர்.

முருகன், அந்தக் காகிதப் பொட்டலத்தை அவரிடம் கொடுத்தான். "இது தானே?"

பொட்டலத்தை அவசரம் அவசரமாகப் பிரித்துப் பார்த்துவிட்டு, "இதுதான் தம்பி! இதுதான்! என்று மகிழ்ச்சியுடன் சொன்னார் அவர். "தம்பி, உனக்கு எப்படி நன்றி சொல்லுவதென்றே எனக்குத் தெரியவில்லை. உனக்கு மற்றவர்கள் பொருளின்மேலே ஆசையில்லாத நல்ல மனம் இருக்கிறது. நீ நன்றாக இருப்பாய்!" என்று அவர் வாழ்த்திவிட்டுப் போனார்.

பணத்தைப் பறிகொடுத்த செய்தியை அம்மாவிடம் எப்படிச் சொல்லுவது என்று கவலையுடன் அரசமரத்து மேடையிலேயே உட்கார்ந்துவிட்டான், முருகன்.

ஆனால், அவன் அம்மாவே அவனைத் தேடிக்கொண்டு வந்துவிட்டாள்.

"அம்மா!"

“என்னடா கண்ணு, உன்னை எங்கெல்லாம் தேடுவது? ஏன் இங்கே உட்கார்ந்து இருக்கிறே?” என்று பதற்றத்துடன் கேட்டாள், அம்மா.

முருகன் தேம்பித்தேம்பி அழுதான். தாயத்து விற்கிறவனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தபோது பணத்தை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டதைச் சொன்னான்.

அம்மா அப்படியே மலைத்து நின்றுவிட்டாள்.

“பணத்தை வைத்துக்கொண்டு வேடிக்கை பார்த்தது தப்புதாம்மா!” என்றான் முருகன்.

அம்மா பெருமூச்சுவிட்டாள்.

“அம்மா, நான் இங்கே உட்கார்ந்திருந்தபோது, ஒரு காகிதப் பொட்டலம் கிடந்து எடுத்தேன். அதில் முப்பது ரூபாய் இருந்தது!” என்றான் முருகன்.

“அதை நீ என்ன பண்ணினே?” என்று பரபரப்புடன் கேட்டாள் அம்மா.

“யாராவது தேடிவந்தால் கொடுத்துவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். பணத்தைத் தவறவிட்டவர் தேடிக்கொண்டு வந்தார். அவரிடம் கொடுத்துவிட்டேன்!”

“கண்ணு!” என்று நாத் தழுதழுக்க, மகனை இறுக அணைத்துக்கொண்டாள், அம்மா. அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

“நீ செய்தது ரொம்ப சரிடா கண்ணு. நமக்கு ஆயிரம் கஷ்டங்கள் வரலாம்; நஷ்டங்கள் வரலாம். அதற்காக மற்றவர்கள் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்காக மற்றவர்களை வருத்தப்பட வைக்கக் கூடாது!” என்றாள் அம்மா.

“எனக்குக் கிழிந்துபோன சட்டைதானே இருக்கிறது அம்மா?” என்றான் முருகன் மிகுந்த வருத்தத்துடன்.

“சட்டை கிழிந்திருந்தால் என்னடா கண்ணு? மனம்தான் நன்றாக இருக்க வேண்டும். இவ்வளவு கஷ்டத்திலேயும் இந்த வயதிலே உனக்குக் கடவுள் நல்ல மனத்தைக் கொடுத்திருக்கிறாரே! எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதுடா. இன்னும் கொஞ்ச நாளிலே பணம் சேர்த்துப் புதுச்சட்டை தைத்துக் கொள்ளலாம்’ கடவுள் கொடுப்பார். வா, வீட்டுக்குப் போவோம்!” என்றாள் அம்மா.

அந்த ஏழைத்தாய், தன் நேர்மையான மகனின் கையைப் பிடித்துக்கொண்டு பெருமையுடன் வீட்டுக்கு நடந்தாள்.

பணம்? அதுவா முக்கியம்?

நன்றி : ஆழி வே. இராமசாமி, நல்லொழுக்கக் கதைகள்

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. முருகன், தனது பணத்தை எங்கு, எவ்வாறு தொலைத்தான்?
2. முருகனின் நேர்மையை விளக்கி எழுதுக.

யாப்பு : செய்யுள் உறுப்புகள்

(அடி, தொடை)

அடி :

சீர்கள் பல அடுத்து நடப்பது அடி எனப்படும். குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என அடி ஐவகைப்படும்..

1. குறளடி : அடிதோறும் இருசீர்களைப் பெற்று வருவது குறளடி எனப்படும்.

(எ–டு)

முக்தி வேண்டுமேல்
பக்தி வேண்டுமால்
சத்தி யம்இது
புத்தி நெஞ்சமே.

2. சிந்தடி : அடிதோறும் முச்சீர்களைப் பெற்று வருவது சிந்தடி எனப்படும்.

(எ–டு)

பழுதி லாத பயிர்த்தொழில்
பழுதி லாது பயிற்றவே
பழுதி லாது பலதொழில்
பழுதி லாது பயிற்றினர்.

3. அளவடி : அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது அளவடி அல்லது நேரடி எனப்படும்.

(எ–டு)

தாய்மொழி தாயினும் தகவிற் போற்றுவன்
ஆய்மொழி யாளர்தம் அன்புக்கு ஏற்றவன்
காய்மொழி யாவதுங் கடிந்து மாற்றுவன்
வாய்மொழி தப்பிடா வகையில் ஆற்றுவன்

4. நெடிலடி : அடிதோறும் ஐந்து சீர்களைப் பெற்று வருவது நெடிலடி எனப்படும்.

(எ–டு)

ஆடும் கடைமணி நாஅசை யாமல் அகிலமெங்கும்
நீடும் குடையைத் தரித்த பிரானிந்த நீள்நிலத்தில்
பாடும் புலவர் புகழ்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழனென் றேயெனைச் சொல்லுவரே!

5. கழிநெடிலடி : அடிதோறும் ஆறு அல்லது அதற்குமேற்பட்ட பல சீர்களைப் பெற்று வருவதைக் கழிநெடிலடி எனக் கூறுவர்.

(எ–டு)
வாழ்வினில் செம்மை வேண்டும்
வாய்மையே பேசல் வேண்டும்
பாழ்ச்செயல் விலக்கல் வேண்டும்
பண்பினைக் காத்தல் வேண்டும்
தாழ்வினை அகற்ற வேண்டும்
தருக்கினை விடுதல் வேண்டும்
சூழ்நிலை உணர்தல் வேண்டும்
சோம்பலைப் போக்க வேண்டும்

இப்பாடல் அடிதோறும் ஆறுசீர்கள் பெற்றுள்ளதால், இதனைக் கழிநெடிலடி என்பர். பாடலிலுள்ள சீர்களை எண்ணி, இதனை அறுசீர்க்கழிநெடிலடி என்பர். இதுபோல் ஏழுசீர்கள் இருந்தால் எழுசீர்க்கழிநெடிலடி என்றும், எட்டுச் சீர்கள் இருந்தால் எண்சீர்க்கழிநெடிலடி என்றும் கூறுவர்.

தொடை :

மலர்களைத் தொடுப்பதுபோலவே சீர்களிலும் அடிகளிலும் மோனை முதலியன அமையத் தொடுப்பது தொடை எனப்படும். (தொடை – தொடுக்கப்படுவது; தொடை – மாலை). பாவின் ஓசையின்பத்திற்கும் சிறப்பிற்கும் இத்தொடை வேண்டுவதாகும். தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்பது பழமொழி.

தொடை எண்வகைப்படும். அவை : 1. மோனைத்தொடை, 2. எதுகைத்தொடை, 3. முரண்தொடை, 4. இயைபுத்தொடை, 5. அளபெடைத்தொடை, 6. இரட்டைத்தொடை, 7. அந்தாதித் தொடை, 8. செந்தொடை.

அவற்றுள் முதல் ஐந்து தொடைக்கான விளக்கங்களைக் காண்போம்.

1. மோனைத்தொடை : செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும்.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. – குறள், 467

இக்குறட்பாவில் முதல் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) இரண்டாம் அடியின் முதற்சீரிலுள்ள முதல் எழுத்தும் (எ) ஒன்றி வந்துள்ளதால், இது மோனைத்தொடை.

2. எதுகைத் தொடை : அடிதோறும் முதலெழுத்து அளவொத்து (ஓசையில்) நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத்தொடை எனப்படும்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. – குறள், 1

இக்குறட்பாவில் முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் க என்னும் இரண்டாம் எழுத்து ஒத்து வந்துள்ளது. எனவே, இஃது அடியெதுகைத்தொடை எனப்படும்.

3. முரண் தொடை : அடிதோறும் முதற்சீர் முரண்படத் தொடுப்பது அடிமுரண்தொடை எனப்படும்.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். - குறள், 628

இப்பாடலில் முதலடியில் இன்பம் என்றும், இரண்டாம்அடியில் துன்பம் என்றும் முரண்பட்ட சொற்கள் வந்துள்ளன. எனவே, இஃது அடிமுரண்தொடை எனப்படும்.

4. இயைபுத்தொடை : அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது அடிஇயைபுத்தொடை எனப்படும்.

கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டத் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம்விளை யாடும்.

இப்பாடலில் அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றி (ஒத்து) வந்துள்ளதால் அடிஇயைபுத் தொடை ஆயிற்று.

5. அளபெடைத் தொடை : அடிதோறும் முதல் சீர் அளபெடுத்து வருவது அடியளபெடைத் தொடை எனப்படும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. - குறள், 15

இப்பாடலில் கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என இரண்டடிகளிலும் அளபெடுத்து வந்துள்ளமையால், அடியளபெடைத் தொடை எனப்படும்.

தொடை விகற்பங்கள்

நான்குசீர்களையுடைய ஓரடியில் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றனைக்கொண்டு தொடுப்பது தொடை விகற்பம் எனப்படும். இவ்வேழும் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகிய ஐந்தும் பொருந்தத் தொடை விகற்பம் முப்பத்தைந்து வகைப்படும்.

மோனை :

1. இணைமோனை (1, 2) :

நாலடி கொண்ட சீருள் முதலிரு சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இணைமோனை எனப்படும்.

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. - குறள், 99

2.பொழிப்பு மோனை (1, 3) :

ஓர் அடியுள் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் முதலெழுத்து ஒத்து வருவது பொழிப்பு மோனை எனப்படும்.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று. - குறள், 22

3. ஒரூஉ மோனை (1, 4) :

ஓர் அடியுள் முதற் சீரிலும் நான்காம் சீரிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, ஒரூஉ மோனை எனப்படும்.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். – குறள், 28

4. கூழைமோனை (1, 2, 3) :

ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து ஒன்றி வருவது கூழைமோனை எனப்படும்.

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். – குறள், 19

5. மேற்கதுவாய் மோனை (1, 3, 4) :

ஓர் அடியுள் முதல், மூன்று, நான்காம் சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் மோனை எனப்படும்.

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துள்நின்று டற்றும் பசி. – குறள், 13

6. கீழ்க்கதுவாய்மோனை (1, 2, 4) :

ஓரடியுள் முதல், இரண்டு, நான்காம் சீர்களில் முதல்எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் மோனை எனப்படும்.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. – குறள், 5

7. முற்றுமோனை (1, 2, 3, 4) :

ஓர் அடியின் நான்கு சீர்களிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்றுமோனை எனப்படும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. – குறள், 391

குறிப்பு: நான்கு சீர்களில் மோனைக்குரிய விகற்பங்கள் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என ஏழிற்கும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது போலவே எதுகையும் வரும்.

எதுகைத்தொடை :

1. இணை எதுகை (1, 2) :

முதலிரு சீர்களின் முதலெழுத்து அளவொத்து நிற்க (ஓசையளவில்) இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இணைஎதுகை எனப்படும்.

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். – குறள், 225

2. பொழிப்பு எதுகை (1, 3) :

ஓர் அடியுள் முதற் சீரிலும் மூன்றாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு எதுகை எனப்படும்.

(எ–டு) அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி. – குறள், 245

3. ஒரூஉ எதுகை (1, 4) :

ஓர் அடியுள் முதல் சீரிலும் நாலாம் சீரிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது ஒரூஉ எதுகை எனப்படும்.

அருளிலார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு. – குறள், 247

4. கூழை எதுகை (1, 2, 3) :

ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழை எதுகை எனப்படும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. – குறள், 350

5. மேற்கதுவாய் எதுகை (1, 3, 4) :

ஓர் அடியுள் முதல், மூன்று, நான்காம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் எதுகை எனப்படும்.

அழக்கொண்ட எல்லாம் அழப்போம், இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. – குறள், 659

6. கீழ்க்கதுவாய் எதுகை (1, 2, 4) :

ஓர் அடியுள் முதல், இரண்டு, நான்காம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் எதுகை எனப்படும்.

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். – குறள், 629

7. முற்றெதுகை (1, 2, 3, 4) :

ஓர் அடியுள் உள்ள நாற்சீர்களிலும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்றெதுகை எனப்படும்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. – குறள், 12

தொடை விகற்பம்	சீர்கள்			
	1	2	3	4
இணை	*	*		
பொழிப்பு	*		*	
ஒரூஉ	*			*
கூழை	*	*	*	
மேற்கதுவாய்	*		*	*
கீழ்க்கதுவாய்	*	*		*
முற்று	*	*	*	*

மேற்கண்ட அட்டவணைக்கேற்ப இயைபு, முரண், அளபெடையைப் பொருத்திக் காண்க.

பயிற்சி :

1. சிந்தடி வருமாறு (அடிதோறும் மூன்றுசீர்கள்) ஆறு அடியளவில் ஒரு பாடலை எழுதுக.
2. பின்வரும் அடிகளில் காணும் தொடை வகைகளை எடுத்தெழுதுக.

அ) இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்

ஆ) சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. தொடை ______________ வகைப்படும்.

அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு

2. முதல், மூன்று, நான்காம் சீர்களில் மோனை ஒத்து வருவது.

அ) முரண் ஆ) மேற்கதுவாய் இ) கீழ்க்கதுவாய்

3. அளவடிக்கு ________________ என்னும் வேறுபெயருண்டு.

அ) குறளடி ஆ) சிந்தடி இ) நேரடி

4. இணையெதுகை என்பது _________,_________ சீர்களில் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

அ) 1, 2 ஆ) 1, 3 இ) 1, 4

2. பொருத்துக.

கூழை	–	1,3,4 சீர்களில் வரும்.
மேற்கதுவாய்	–	1,2,3,4 சீர்களில் வரும்.
கீழ்க்கதுவாய்	–	1,2,3 சீர்களில் வரும்
முற்று	–	1,2,4 சீர்களில் வரும்.

ஆ) குறுவினாக்கள்

1. அடி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. சிந்தடி என்றால் என்ன ? சான்றுடன் தருக.
3. அளவடி என்றால் என்ன? சான்று தருக.
4. நெடிலடியை விளக்குக.
5. தொடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. தொடைவிகற்பம் என்றால் என்ன?

வகுப்பறைத்திறன்கள்

படைப்பாற்றல் :

வானொலி உரைச்சித்திரம் அமைத்தல்

உன் ஊர்த்திருவிழா குறித்து வானொலி உரைச்சித்திரம் அமைக்க.

அறிக்கை எழுதுதல் : உங்கள் பள்ளியில் நடைபெற்ற குடியரசுநாள் கொண்டாட்ட நிகழ்வுகளை அறிக்கையாக எழுதுக.

மொழித்திறன் பயிற்சி

அ) உரிய பொருளைத் தேர்ந்தெழுதுக.

1. கொண்டல் (வேகம், தாகம், மேகம்) __________ .
2. ஆகுலம் (வருத்தம், சோர்வு, தளர்வு) __________ .
3. தாமம் (அணி, ஆடை, மாலை) __________ .
4. புரிசை (அகழி, வாயில், மதில்) __________ .
5. மல்லல் (குளம், களம், வளம்) __________ .

ஆ) கதையை நீ விரும்புமாறு முடிக்க.

கதிரவன் மறைந்து காரிருள் மெல்லமெல்ல வானைக் கவ்வத் தொடங்கியது. அவ்வேளையில் ஊருக்கு நடுவே ஒருவீட்டின்முன் மக்கள் கூட்டமாகத் திரண்டிருந்தனர். அவ்வீட்டுத் திண்ணையில் பாடகர் ஒருவர் பாடிக்கொண்டிருந்தார். கூடியிருந்தோர் தங்களை மறந்து இசையைக் கேட்டு மகிழ்ந்துகொண்டிருந்தனர். அப்போது, அவ்வழியே சிறுவன் ஒருவன் வந்தான். அவனும் கூட்டத்தில் நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கினான். சிறிதுநேரம்

கடந்ததும், அச்சிறுவன் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான். அவனிடம் பெரியவர் ஒருவர், "ஏனப்பா அழுகிறாய்?" என்று கேட்டார். அழுகையை நிறுத்தாமலேயே அவன் சொல்லத் தொடங்கினான். "ஐயா, எங்கள் வீட்டில் ஆடு வளர்க்கிறோம். ஒருநாள்.........

பொருந்தாத தமிழெண்களை வட்டமிடுக

க க – 11
உ உ – 12
க உ – 17
ரு – 5
௰ – 10

கட்டுரைப் பயிற்சி : தமிழர் திருநாள்.

கடிதப் பயிற்சி : நண்பனை ஊர்த்திருவிழாவிற்கு வருமாறு கடிதம் எழுதுதல்.

கையெழுத்து இதழ் (மாதிரி வடிவம்) சிறுசேமிப்புச் சிறப்பிதழ்		
பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை		
துணுக்குகள் சிறுசேமிப்புக் குறித்த துணுக்குகள்	ஓவியம் சேமிப்பை விளக்கும் படங்கள்	உரையாடல் சேமிக்கும் வழிகள்
கவிதை சிறுதுளிப் பெருவெள்ளம்	சிறுகதை வரவு எட்டணா செலவு பத்தணா	நாடகம் சேமிப்பில்லா நாடு கூரையில்லா வீடு
கட்டுரை சிறுசேமிப்பும் அதன் பயன்களும்	பழமொழிகள் சிக்கனம் வீட்டைக் காக்கும் சேமிப்பு நாட்டைக் காக்கும்	பாடல் சேமிப்பு
இத்திங்களுக்குரிய தமிழ்மன்ற நிகழ்ச்சிகள்		

வாழ்க்கைத்திறன்

சிறப்பாகத் தொடர்புகொள்ளும் திறன்

எட்டாம் வகுப்பு முடித்ததும் மணிமேகலைக்குத் திருமணம் செய்துவைக்க, அவள் பெற்றோர் எண்ணினர். இதனை அறிந்த அவள், திருமணம் ஆகும்வரையாவது படிக்கிறேன் எனப் பெற்றோரிடம் கேட்டுக்கொண்டாள். அவள் தற்பொழுது ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறாள். பெற்றோர் திருமணம் செய்துவைத்துவிடுவார்களோ என்னும் கவலை அவளை வாட்டிக் கொண்டிருந்தது. வகுப்பாசிரியரிடம் தன் நிலையைக் கூறி, இதற்கு ஒரு தீர்வு வேண்டினாள்.

திருமண வயது, பெண்கல்வியின் தேவை ஆகியவற்றை அவளின் பெற்றோரிடம் எடுத்துக்கூறித் திருமணத்தைத் தள்ளிப்போடவும் மேற்கொண்டு படிக்க வைக்கவும் உதவுவதாக

வகுப்பாசிரியர் ஆறுதல் கூறி அவளை அனுப்பிவைத்தார். கூறியவாறே அவளின் பெற்றோரைச் சந்தித்து மணிமேகலையை மேற்கொண்டு படிக்கவைக்க ஒப்புக்கொள்ளச் செய்தார்.

மணிமேகலை தனக்கேற்பட்ட சிக்கலை உரியமுறையில் வகுப்பாசிரியரிடம் கூறியதால், அவளுக்கொரு தீர்வு கிடைத்தது. வாழ்க்கையில் சிக்கல் ஏற்படுவது இயற்கை. ஆனால், அதற்காகத் துவண்டுவிடாமல், நம்பிக்கைக்கு உரியவரிடத்தில் தன் சிக்கலை எடுத்துக்கூறி வழிகாண்பதே சிறந்தது; அப்படியில்லாமல், மனத்திற்குள்ளேயே வைத்துக்கொண்டு கவலைப்படுவதனால் யாதொரு பயனும் இல்லை.

மதிப்புக்கல்வி

தன்னம்பிக்கை

திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்தவர் அவர். படிப்பில் நாட்டம் இல்லாததால், கையிலிருந்த சிறிதளவு பணத்துடன் சென்னைக்குச் சென்றார். பணம்தான் கையில் குறைவாக இருந்ததே தவிர, அவரிடம் இரண்டு மூலதனங்கள் இருந்தன. ஒன்று தன்னம்பிக்கை; மற்றொன்று, எந்த வேலையாக இருந்தாலும் அதில் உயர்வுதாழ்வு பார்க்காமல் வேலை செய்யும் இயல்பு. மிதிவண்டிக் கடை ஒன்றில் மிகக் குறைந்த வருமானத்தில் வேலைக்குச் சேர்ந்தார். அலுவலகத்தைக் கூட்டிப் பெருக்குபவர் அன்று வரவில்லையென்றால், அந்த வேலையையும் அவரே செய்வார். மற்றத் தொழிலாளர்கள் கேலி செய்தபோதும், அவர் அதனைப் பொருட்படுத்தவில்லை. உழைப்பின் காரணமாக, இராயல் மிதிவண்டி நிறுவனம் என்று தனியாக ஒரு நிறுவனத்தைத் தொடங்கினார். படிப்படியாக முன்னேறி ஈசன் பொறியியல் நிறுவனம் தொடங்கி, இன்று ஈசன் குழும நிறுவனங்களில் எழுநூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உழைத்து வருகின்றனர். தன்னம்பிக்கை கொண்டு உழைப்பால் உயர்ந்தவர்தாம் தொழிலதிபர் ஈசுவரன்.

மொழியாக்கம் செய்க.

There is a beauty in nature. The pathless woods give us pleasure. We sit under the green trees. We enjoy the beauty of multi coloured flowers. The songs of the birds fill the air with sweet music. Squirrels keep running about. They leap from tree to tree. How brisk they are! The forest is alive with different kinds of animals.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. Anger is sworn enemy.
   கோபம் குலத்தைக் கெடுக்கும்.
2. Break my head and bring a plaster.
   பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவதுபோல.
3. There is danger in men's smiles.
   தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்.
4. Like hand and glove.
   நகமும் சதையும் போல.

5.. Wealth is best known by want.
   நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

ஓய்வும் பயனும்!

ஓய்வாக இருக்கையில் தம்பி – நீ
ஓவியம் வரைந்து பழகு!
தூய்மையோ டமைதி சேரும்! – நன்கு
தோன்றிடும் உள்ள அழகு!

பாக்களும் இயற்றிப் பழகு – நல்ல
பாடலைப் பாடி மகிழ்வாய்!
தாக்குறும் துன்பம் யாவும் – இசைத்
தமிழினில் மாய்ந்து போகும்!

கதைகளும் எழுதிப் பழகு – பூங்
காவினில் உலவி வருவாய்!
புதைந்திடும் அறிவு வளரும் – மனம்
புதுக்கிடும் வாழ்வு பெறுவாய்!

* அறிவியல் ஆய்வு செய்வாய் – நீ
அன்றாடச் செய்தி படிப்பாய்!
செறிவுறும் உன்றன் அறிவு – உளச்
செழுமையும் வலிவும் பெறுவாய்!

மருத்துவ நூல்கள் கற்பாய் – உடன்
மனநூலும் தேர்ந்து கற்பாய்!
திருத்தமெய்ந் நூல்கள் அறிவாய் – வருந்
தீமையும் பொய்யும் களைவாய்! *

– பெருஞ்சித்திரனார்

பொருள்: மாணவர்களே! ஓய்வாக இருக்கும் நேரத்தில் ஓவியம் வரையக் கற்றுக்கொண்டால் தூய எண்ணங்களும் அமைதியும் சேர்ந்து உள்ளத்தின் அழகு வெளிப்பட, அது காரணமாக அமையும்; தமிழில் பாடல்கள் எழுதவும் பாடவும் பழகிக்கொள்ளுங்கள்; இசைத்தமிழின் இனிமையால் வாழ்வின் துன்பங்கள் தொலைந்துபோகும். பூங்காவில் உலாவி வர, அது நம் உள்மனத்தில் புதைந்துள்ள அறிவாற்றலை வெளிப்படுத்தும்; புத்துணர்வும் கற்பனைத்திறனும் வளரும்.

அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுங்கள்; அன்றாட நிகழ்வுகளைச் செய்தித்தாள் வாயிலாக அறிந்துகொள்ளுங்கள்; உலகநிகழ்வுகளை அறிவதன்மூலம் அறிவுத்திறன் மேம்படும்; உள்ளம் வளமும் வலிமையும் பெற்றுச் சிறக்கும்; மருத்துவ நூல்களையும் மனநல நூல்களையும் படித்துத் தெரிந்துகொள்ளுங்கள்; அவை உடலையும், உள்ளத்தையும் பாதுகாக்கத் துணைபுரியும். நீங்கள் வாழ்க்கைக்கு உதவும் தத்துவ நூல்களைக் கற்றால், அதன்வழித் தீமையையும் பொய்ம்மையையும் விடுத்து நல்வாழ்வு வாழலாம். எனவே, ஏட்டுக்கல்வியுடன் கலையறிவும் தொழிற்கல்வியும் அறிவியற் சிந்தனையும் இருந்தால், நீங்கள் வாழ்வில் வெற்றிபெறலாம்; ஆதலால், ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிட்டு வாழ்வில் வளம்பெறுங்கள்.

ஆசிரியர் குறிப்பு : பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை. மாணிக்கம். இவரது ஊர் சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம். இவரின் பெற்றோர் துரைசாமி, குஞ்சம்மாள் ஆவர். 10.03.1933அன்று பிறந்த இவர், 11.06.1995ஆம் நாள் மறைந்தார்.

கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப் பறவைகள், நூறாசிரியம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்கள்மூலம் உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்க இவர் பாடுபட்டார்.

நூற்குறிப்பு : இப்பாடல், பள்ளிப் பறவைகள் என்னும் குழந்தைப் பாடல் தொகுப்பின் இரண்டாம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்நூலிலுள்ள பாடல்கள் பல தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களில் வெளிவந்தவை. இந்நூல் குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை என்னும் மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இசையால் ______________________ மறைந்து போகும்.

2. உலக நிகழ்வுகளை அறிந்தால் ______________ மேம்படும்.

3. ஏட்டுக் கல்வியறிவுடன் ____________________ கல்வியறிவும் தேவை.

4. பள்ளிப்பறவைகள் நூல் ______________________பிரிவுகளாக அமைந்துள்ளது.

ஆ) குறுவினாக்கள்

1. பெருஞ்சித்திரனார் குறிப்பு எழுதுக.
2. பள்ளிப் பறவைகள் நூலமைப்பைக் கூறுக.
3. உள்ளத்தின் அழகு எப்போது வெளிப்படும் ?
4. கற்பனைத்திறன் வளர யாது செய்யவேண்டும் ?
5. அறிவுத்திறன் மேம்படும் வழி யாது ?
6. எப்போது நல்வாழ்வு வாழலாம் எனப் பெருஞ்சித்திரனார் கூறுகிறார் ?

இ) சிறுவினாக்கள்

1. ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்கும் வழிகளாகப் பெருஞ்சித்திரனார் கூறுவன யாவை ?
2. வாழ்வில் வெற்றிபெறுவதற்கான வழிகள் யாவை ?

ஈ) நெடுவினா

ஓய்வும் பயனும் பற்றிப் பெருஞ்சித்திரனாரின் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

எதிர்காலம் யாருக்கு ?

உதிர்காலம் இனிமேலே யாருக்கு? – நெஞ்சம்
ஓட்டை அடைந்து – பிறர்
தேட்டைக் கவர்ந்து பிழைப்பாருக்கு – வரும்

எதிர்காலம் இனிமேலே யாருக்கு? – கையால்
ஏரைப் பிடித்து – நெற்றி
நீரைச் சிந்தி உழைப்பாருக்கு!

சிறைச்சாலை இனிமேலே யாருக்கு? – பொருள்
தேக்கிப் புதைத்துச் – சிறு
பாக்கி பறித்து வதைப்பாருக்கு!

அறச்சாலை இனிமேலே யாருக்கு? – யாவும்
ஆக்கிக் கொடுத்துத் – துயர்
போக்கி அருளை விதைப்பாருக்கு

பிணமாலை இனிமேலே யாருக்கு? – கதை
பேசிக் களித்து – மடப்
பாசி பிடித்துக் கிடப்பாருக்கு – புகழ்

மணிமாலை இனிமேலே யாருக்கு? – சோம்பல்
மாற்றிப் பறந்து – வினை
யாற்றித் துணிந்து நடப்பாருக்கு.

– மீரா

பொருள் : உள்ளத்தில் பேராசையெனும் ஓட்டைவிழுந்து, பிறரது செல்வத்தை வஞ்சமாகப் பறித்துப் பிழைப்பவருக்கு இனி வருவது அழிவுகாலமே. ஏரைப்பிடித்து நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உணவை உருவாக்க உழைத்திடும் உழவர்களுக்கு இனிப் பிறப்பது நல்ல எதிர்காலமே. தேவைக்கு மேலே பொருளைச் சேர்த்ததோடு சிறுகடனையும் திருப்பிச் செலுத்தவியலாத வறியோரை வதைத்துப் பறிக்கும் இரக்கமில்லாதோர்க்குக் கிடைப்பது சிறைச்சாலையே. உலக நன்மைக்கு வளம்பெருக்கி நலம் அமைத்து உயிர்களின் இன்னல் நீக்கும் அருளாளர்க்குக் கிட்டுவது வீடுபேறாம் அறச்சாலையே. வீணான பழங்கதைகளைப் பேசி மகிழ்ந்து மடைமையில் ஊறிக்கிடக்கும் பழைமைவாதிகளுக்கு வருவது இனிப் பிணமாலையே. சோம்பலை ஒழித்துப் பறவைபோல் பறந்து திரிந்து உழைத்து வாழும் துணிவுடையோர்க்கு வந்துசேர்வது புகழ் என்னும் மணிமாலையே.

சொற்பொருள் : தேட்டை – செல்வம்.



ஆசிரியர் குறிப்பு : மீரா என்னும் பெயர் மீ. இராசேந்திரன் என்பதன் சுருக்கமே. இவர் 1938ஆம் ஆண்டு சிவகங்கையில் பிறந்தார். தாம் படித்த சிவகங்கைக் கல்லூரியில் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணியாற்றினார்.

இராசேந்திரன் கவிதைகள், மூன்றும் ஆறும், கோடையும் வசந்தமும், ஊசிகள், கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள், குக்கூ ஆகிய கவிதை நூல்களையும், வா இந்தப் பக்கம், மீரா கட்டுரைகள் ஆகிய கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார்.

தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு, பாவேந்தர் விருது, சிற்பி இலக்கிய விருது, தமிழ்ச் சான்றோர் பேரவை விருது முதலியவற்றை வழங்கித் தமிழுலகம் இவரைச் சிறப்பித்துள்ளது.

நூற்குறிப்பு : இப்பாடல் இராசேந்திரன் கவிதைகள் என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இப்பாடல்களைத் தொகுத்தவர் சேந்தி உடையநாதபுரம் சீனிவாசன். இந்நூல், சிறுதுளி பெருவெள்ளம் என்னும் பெருந்தலைப்பினுள் அமுதத்துளிகள், தேன்துளிகள், கண்ணீர்த்துளிகள், பன்னீர்த்துளிகள், மழைத்துளிகள், குருதித்துளிகள் என்னும் சிறுதலைப்புகளின்கீழ் நாற்பத்தைந்து கவிதைகள் உள்ளன. இக்கவிதை, மழைத்துளிகள் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தேட்டை என்னும் சொல்லின் பொருள் ______________ .
2. ஏர் பிடித்து உழைப்பவருக்குக் கிடைப்பது ______________ .
3. அறச்சாலை ______________ விதைப்பாருக்கே கிட்டும்.

ஆ) குறுவினாக்கள்

1. யாருக்கு இனி உதிர்காலம் என மீரா குறிப்பிடுகிறார்?
2. யாருக்கு இனி நல்ல எதிர்காலம் வாய்க்கும்?
3. மீரா குறிப்பிடும் இரு மாலைகள் எவை?

இ) சிறுவினாக்கள்

1. சிறைச்சாலையும் அறச்சாலையும் யாருக்குரியதென மீரா கூறுகிறார்?
2. எவரெவர் கழுத்தில் எவ்வெம் மாலைகள் விழுமென மீரா கூறுகிறார்?

ஈ) நெடுவினா

எதிர்காலம் யாருக்கு எனும் பாடலின் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

ஒப்படைப்பு : இப்பாடலின் தொடைநயத்தை எழுதிக் கொணர்க.

உயிர்க்கோளம்

மலையும் கடலும் காடும் கொண்ட உலகம் பிறந்து அளவற்ற காலம் ஆகிவிட்டது. காய்கின்ற கதிரவன் சுழன்றபோது சிதறி வந்த ஒருபகுதி, உருண்டை வடிவம் பெற்றுத் தானும் சுழன்றது. நெருப்புக் கோளமாக இருந்த அது, காலப்போக்கில் குளிர்ந்தது. நீரும் நிலமும் தோன்றின. உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற உயிர்க்கோளமாக அது மாறுவதற்குச் சுமார் நூற்றைம்பது கோடி ஆண்டுகளுக்கும் மேலானது. உயிர்கள் முதன்முதலில் நீரில் தோன்றின. அவை நாளடைவில் நிலத்திலும் பரவின. பின்னர், அவை படிப்படியாக நிற்பன, ஊர்வன, பறப்பன, நடப்பன, மனிதன் என வளர்ச்சி நிலைகளைப் பெற்றன. அண்டத்தில் நிலவும் சந்திரன், செவ்வாய் முதலான கோள்களில் உயிரினங்கள் வாழ இயலா. நிலத்தில் மட்டுமே உயிர்கள் வாழ இயலுமாதலால், அதனை உயிர்க்கோளம் என வழங்குகிறோம்.

உயிரினங்களின் இயல்பை அறிஞன் ஆராய்ந்தான். ஓரறிவு முதலாக ஆறறிவுயிர் ஈறாகப் பிரித்தான். ஆறறிவு பெற்ற மனிதன் உயிரினக் குன்றின் மணிமுடியாக வீற்றிருக்கிறான். மனிதனின் அறிவும் ஆற்றலும் அளப்பரியன. மனிதனே உயிர்க்கோளத்தின் மையம். இன்று அதன் பல பக்கங்களிலும் மனித இனங்கள் பல வாழ்கின்றன. உயிர்க்கோளத்தின் இயற்கைச் சூழலுக்கும் மனித வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

நிலத்தின் மேற்பரப்பு

உயிர்க்கோளம் தன்னகத்தே பல இயற்கைக்காட்சிகளைக் கொண்டுள்ளது. பரந்த வான்வெளியும், உயர்ந்த மலை முகடும், மலைவீழ் அருவியும், வற்றாமல் வளம் பரப்பும் ஆறும், கவின்மிகு சோலையும், கனிதரும் மரங்களும், கண்ணைக்கவரும் வண்ண மலர்களும், கருத்தைக் கவரும் வியத்தகு உயிரினங்களும் அதன் நிலைக்களன்கள் ஆகும். உயிர்களின் வாழ்க்கை இயற்கைச் சூழ்நிலைகளாகிய நீரையும் காற்றையும் கொண்டு நடைபெற்று வருகின்றது. இங்குப் பலவித இயற்கைக் காட்சிகள் நிலவியுள்ள போதிலும், அவையாவும் மாற்றத் திற்கு உட்பட்டவை. மலைகள், ஆறுகள், சமவெளிகள் முதலியன அன்றிருந்ததுபோல இன்று இல்லை. அவை பல மாற்றங்களைப் பெற்றுள்ளன. சான்றாக, அன்றிருந்த பூம்பு காரும், தனுசுக்கோடியும் இன்று கடலுக்குள்



மூழ்கிவிட்டன. கடற்கரைக் கோவில்களுள் மாமல்லபுரம் ஒன்றுதான் எஞ்சியுள்ளது. எரிமலைகள் மற்றும் நிலநடுக்கங்களால் நிலப்பகுதிகள் கடலில் மூழ்கிவிடுவதும், புதிய நிலத் தோற்றங்கள் உருவாவதும் உண்டு.

கடல் வளம்

உயிர்க்கோளம் என்றால், நாம் வாழும் நிலப்பகுதியை மட்டும் கருத்தில் கொள்ளாமல், அதில் அடங்கியுள்ள நீர்ப்பகுதியையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும். நிலத்தின் மேற்பரப்பில் முக்கால் பங்கு கடல்நீர் சூழ்ந்துள்ளது. கடல், என்றும் வற்றாத நீர் நிலையாகும். அது, தட்பவெப்பநிலையை ஒழுங்குபடுத்துகிறது. கடல் நீர் ஆவியாக மாறி, மேகங்களாகத் திரண்டு மழையாகப் பொழிகிறது. வளம் குன்றாத மீன்துறையாகக் கடல் பயன்படுகிறது; மனித வாழ்க்கைக்குத் தேவையான உப்பு, தாதுப்பொருள் முதலியவற்றை வழங்குகின்றது. முத்து, பவளம், கிளிஞ்சல், கடற்பஞ்சு, சங்கு முதலிய பொருள்களை அளிக்கின்றது. கடலில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன.

வளிக்கோளம்

நிலப்பரப்பில் கடல்நீர் சூழ்ந்துள்ளதுபோலவே, காற்று மண்டலமும் மேலே பரவியுள்ளது. நீர்ப்பாகத்தை நீர்க்கோளம் என்றும், காற்றுமண்டலத்தை வளிக்கோளம் என்றும் கூறுவர். காற்றுமண்டலம் ஒரு கலவை. அதில் உயிர்வளி (ஆக்சிசன்) 21 %, உப்புவளி (நைட்டிரசன்) 78 %, மற்ற வளிகள் 1 % கலந்துள்ளன. உயிரினங்கள் வாழும் பகுதியில் உள்ள நிலம், நீர், காற்று போன்றவை அடங்கிய நிலை சுற்றுச்சூழல் எனப்படும்.

உலக வளிக்கோளம், உயரத்தையும் வெப்பநிலையையும் அடிப்படையாகக்கொண்டு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவுகளில் குறிப்பிடத்தக்கவை அடிவளி மண்டலம், மேல்வளி மண்டலம் ஆகியன. அடிவளிமண்டலம் நிலத்தின் வெப்பநிலையை ஒரே சீரான நிலையில் வைத்திருக்கப் பெரிதும் உதவுகிறது. புவிக்கு வரும் வெப்பத்தினைச் சீர்செய்து அனுப்பப் பசுமைக் கூண்டுபோல் இம்மண்டலம் செயல்படுகிறது.

மேல்வளி மண்டலத்திலுள்ள உயிர்வளிப் படலம் (ஓசோன்) உயிர்கள் செழிக்க இயற்கை அளித்திருக்கும் பாதுகாப்பு அரணாகும். கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்கள்நிலப்பரப்பைத் தாக்காத வகையில் இப்படலம் தடுக்கிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த உயிர்வளிப்படலத்தில் (ஓசோன்) சிதைவு ஏற்பட்டிருப்பது தற்பொழுது கண்டறியப்பட்டுள்ளது. குளிர்பதனப்பெட்டியில் பயன்படுத்தப்படும் குளோரோ ஃபுளுரோ கார்பன், இவ்வுயிர் வளிப்படலத்தைச் சிதைப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது.

சுற்றுச்சூழல் மாசடைதல்

நிலம், நீர், காற்று ஆகிய மூன்றும் முறையே திண்ம, நீர்ம, வாயுப்பொருள் கழிவுகளால் சீர்கேடு அடைகின்றன. மக்களால் அன்றாடம் பயன்படுத்தப்பட்ட பிறகு கழிவாக மாறும் குப்பைகள், விவசாயக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் முதலியவற்றால் நிலம் மாசடைகிறது. வீடுகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர், ஆலைகள் வெளியேற்றும் வேதியியல்

கழிவுகள் இவற்றாலும் நீர் மாசடைகிறது. போக்குவரத்து ஊர்திகள், தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும்நச்சுப்புகை, அணுமின்நிலையங்கள் வெளியேற்றும் கதிரியக்க மாசு முதலியவற்றினால் காற்றும் பெருமளவு மாசடைந்து வருகிறது. சூழலைக் கெடுக்கும் இக்காரணிகளை உரிய முறையில் சீர்செய்து சூழலைப் பாதுகாப்பது இன்றியமையாதது.

மாசு நீக்கும் வழிமுறைகள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மரங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. உயிரினங்களைக் காக்க வனங்களை உருவாக்கிப் பாதுகாப்பது இன்றியமையாததாகும். மரங்களைத் தொடர்ந்து அழித்து வருவதனால் நிலச்சரிவு, மண் அரிப்பு, மழையின்மை ஆகியவை நிகழ்கின்றன. எனவே, மழைவளம் பெருகவும் சூழலைப் பாதுகாக்கவும் மரங்களை வளர்த்தல்வேண்டும். நிலமகளின் காய்ச்சலுக்கு மரங்களே நல்ல மூலிகைகளாகும். நலமான சூழல் நிலவியபோது குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான்; இன்றைய சூழலில் என்ன பிறக்குமோ ? என மாசுபடிந்த சூழலை விளக்குவர் புதுக்கவிஞர். விண்ணை வெற்றிகொள்ளும் முனைப்பில் மண்ணை இழக்காமல் பாதுகாப்பது நம் கடமையாகும்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. முதன்முதலில் உயிர்கள் ________________ தோன்றின.
2. மனிதன் உயிரினக்குன்றின் ________________த் திகழ்கிறான்.
3. மழைவளம் பெருக ________________ வளர்த்தல் வேண்டும்.
4. கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக்கதிர்களைத் தடுப்பது ____________ படலம்.

ஆ) குறுவினாக்கள்

1. நிலக்கோளத்தை உயிர்க்கோளம் என அழைப்பதேன் ?
2. உயிர்க்கோளத்தில் காணப்படும் இயற்கைக்காட்சிகள் யாவை ?
3. கடலிலிருந்து நமக்குக் கிடைக்கும் பொருள்கள் யாவை ?
4. வளிமண்டலம் பற்றிக் குறிப்பு வரைக.
5. உயிர்க்கோளம் மாசடைவதற்கான காரணங்கள் யாவை ?

இ) சிறுவினாக்கள்

1. நிலக்கோளத்தில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி எழுதுக.
2. வெப்பமயமாதல் – விளக்குக.
3. உயிர்க்கோளத்தைப் பாதுகாக்கும் வழிமுறைகள் யாவை ?

ஈ) நெடுவினா

உயிர்க்கோளத்தில் ஏற்படும் மாசுகளையும் அவற்றை நீக்கும் வழிமுறைகளையும் விவரிக்க.

நல்ல உள்ளம்

சரியாகப் பத்து ஆண்டுகளுக்குமுன் இதுபோன்ற ஒரு காலை நேரத்தில்தான் சண்முகத்தை நான் முதன்முதலாகப் பார்த்தேன். அன்று, அவர் வீட்டுத்திண்ணையில் நானும் நம்மாழ்வாரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அவருடைய ஒன்பது வயதுடைய பேரனும் எட்டு வயதுடைய பேத்தியும் முற்றத்து வேப்பமர நிழலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வலதுகைப் புறத்திலிருந்த நீண்ட தொழுவில் பத்துப் பதினைந்து பசுக்களும், ஐந்தாறு எருமைகளும் தீவனம் தின்று கொண்டிருந்தன. வீட்டில் வேறு யாரும் இல்லை. எல்லாரும் காடுகரைகளுக்குப் போயிருந்தனர்.

ஐந்தாறு நாளில் நான் திருநெல்வேலிக்குப் போவதாக இருந்த செய்தியைச் சந்தர்ப்பவசமாக நம்மாழ்வாரிடம் சொன்னேன். திருநெல்வேலியில் தமக்கு ஒரு நல்ல போர்வை வாங்கி வரவேண்டும் என்று அவர் என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது, “ஐயா! கும்பிடுகிறேன்” என்ற குரல் கேட்டு, நானும் அவரும் திரும்பிப் பார்த்தோம். முற்றத்தில் சண்முகம் நின்று கொண்டிருந்தான்.

“வாப்பா, சண்முகம்!” என்றார் நம்மாழ்வார். பிறகு, “வா, இப்படி உட்காரு” என்று சொல்லிப் பக்கத்துத் திண்ணையை அவனுக்குச் சுட்டிக் காட்டினார்.

ஆனால், அவன் வந்து உட்காரவில்லை. மரியாதையோடு முற்றத்திலேயே நின்று கொண்டிருந்தான்.

“இவருக்கு எந்த ஊரோ ?” என்று நம்மாழ்வாரைக் கேட்டேன்.

“மந்தித்தோப்பு!” என்றார் நம்மாழ்வார்.

அது எங்கள் ஊரில் இருந்து ஆறு மைல் தூரத்தில் இருக்கும் கிராமம்.

சண்முகம், தான் வந்த காரியத்தைப் பேசத் தொடங்கினான்.

“ஐயா! நோட்டு விசயமாத்தான் உங்களைப் பார்க்க வந்தேன்” என்றான்.

“நோட்டு விஷயமா ? போன மாசத்துக்கு முந்தின மாசந்தானே வட்டியைக் கொண்டாந்து குடுத்தே ? அதுக்குள்ளே என்ன ?”

“ஐயா! அந்த நோட்டை இன்னும் பத்து ஆண்டு ஆனாலும் என்னாலே மீட்டமுடியும்னு தோணல்லே. நானும் ஆனமட்டும் தான் பார்க்கிறேன். வரவுக்கும் செலவுக்கும் சரியாய்த்தான் இருக்கு. ஒரு காசு மிஞ்சல்லே. ரெண்டு ஆண்டு போனால், என்னாலே வட்டிகூடக் கட்ட முடியாது போலிருக்கு. குடும்பமும் நாளுக்குநாள் பெரிசாகிக்கிட்டே வருது. போன மாசம்கூட எனக்கு ஒரு கொளந்தை...” என்று சங்கோஜத்துடன் சொல்லி நிறுத்தினான் சண்முகம்.

நம்மாழ்வார் இலேசாகச் சிரித்துக்கொண்டு, “என்ன குழந்தை ? ஆணா ? பெண்ணா ?” என்று கேட்டார்.

ஆம்பளைப் புள்ளைதான் ஐயா!”

“போகட்டும் போகட்டும். உனக்கு இப்போ எத்தனை குழந்தை ?”

“கடவுள் புண்ணியத்திலே அஞ்சு கொளந்தை இருக்கு, ஒரு பொண்ணும் நாலு ஆணுமா”

“சரி! நோட்டைத் திருப்ப முடியல்லேன்னா என்ன செய்யப் போறே ?”

“அதனைச் சொல்லத்தான் வந்தேன். என் நெலத்தை எடுத்துக்குங்க” என்று சுருக்கமாகச் சொன்னான் சண்முகம்.

“ரொம்பக் கெட்டிக்காரன்டா, ரொம்பக் கெட்டிக்காரன்! இந்த மாதிரி யோசனை வேறே யாருக்குத் தோணும் ?” என்று சொன்ன நாயுடு, என்னைப் பார்த்துத் திரும்பி, சண்முகம் கடன் வாங்கிய விவரத்தைக் கூறினார்.

மூன்று ஆண்டுகளுக்குமுன், தன் தங்கை கல்யாணத்துக்கும், தன் குடும்பச் செலவுக்குமாகச் சேர்த்து நம்மாழ்வாரிடம் அவன் ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கியிருக்கிறான். சொந்த ஊரில் அவனுடைய நான்கு ஏக்கர் நிலத்தின் பேரில் அவ்வளவு தொகையைக் கடன் கொடுக்க யாரும் தயாராக இல்லை. அதனால் ஆறு மைல் தூரம் ஊர்விட்டு ஊர் நடந்துவந்து, நம்மாழ்வாரிடம் நோட்டு எழுதிக்கொடுத்துப் பணம் வாங்கியிருக்கிறான். ஆண்டு தவறாமல் வட்டியும் செலுத்திக்கொண்டு வந்தானாம். இப்போது, கடனைக் கட்ட தனக்குச் சக்தி இல்லை என்று சொல்லி நிலத்தை எடுத்துக்கொள்ளும்படி நம்மாழ்வாரைக் கேட்டுக்கொள்ள வந்திருக்கிறான்.

அவனுடைய நிலம் ஐந்நூறு ரூபாய் பெறுமா என்பது எனக்குத் தெரியாது. நம்மாழ்வாரின் நல்ல குணத்தைக் கண்டு அவரை அவன் ஏமாற்றிவிடக் கூடாதே என்று நினைத்தேன். அதனைச் சூசகமாக அவருக்குத் தெரிவிக்கவும் முடியவில்லை. எனினும், நிலம் நன்றாக விளையவில்லையோ, அதனால்தான் கடன் கட்ட முடியவில்லையோ என்று கேட்பவனைப்போல், “நிலம் எப்படி ?” என்று சண்முகத்தைக் கேட்டேன்.

உடனே நம்மாழ்வார் இடைமறித்து, “நிலம் எப்படி இருக்கும் ? இவனுக்கு இருப்பதே அந்த நாலு ஏக்கர்தான். அதனைக் கண்ணும்கருத்துமா உழுது உரம்போட்டு வச்சிருப்பான். ஏழைநிலம் தரிசாகக் கிடக்குமா ?” என்றார். “நிலத்தை எனக்குக் குடுத்திட்டு நீ பிள்ளை குட்டிகளை எப்படிக் காப்பாத்துவே ?” என்று சண்முகத்தைக் கேட்டார்.

அப்பொழுது அவன் ஒரு கணக்குப் போட்டுக் காட்டினான்:

“ஐயா! இந்த நாலு ஏக்கரிலே பாடுபட்டால், என் குடும்பத்துக்கு ஆறுமாசச் செலவுக்குத்தான் சரியாயிருக்கு. மிச்சம் ஆறுமாசமும் கூலிவேலைக்குப் போய்த்தான் குடும்பத்தைக் காப்பாத்தி வர்றேன். உங்களுக்கு நெலத்தை விட்டுட்டால் ஆண்டுமுழுவதும் கூலிவேலைக்குப் போவேன். கணக்குப் பார்த்தால், எனக்கு நெலம் இருக்கிறதும் ஒண்ணுதான்; இல்லாததும் ஒண்ணுதான்.

“அதனாலே நிலத்தைக் குடுத்திட்டா உனக்கு நஷ்டமில்லே என்கிறே?”

“நஷ்டமுமில்லே. அதே சமயத்திலே கடனும் தீர்ந்துபோகும்.

சண்முகத்தின் கணக்கைக் கேட்டுவிட்டு நம்மாழ்வார் மற்றொருமுறை சிரித்தார். அவன் புத்திசாலித்தனத்தையும் நேர்மையையும் என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

நம்மாழ்வார் தலையைக் குனிந்துகொண்டு சிறிதுநேரம் யோசனை செய்தார். ஏதோ நினைவுக்கு வந்தவர்போல், தொழுவை இக்கடைசியிலிருந்து அக்கடைசிவரை பார்த்தார்.

“சண்முகம்! அந்தா கிடக்கிற புல்லுக்கட்டை அவுத்து, அந்தக் கோடியிலே நிக்கிற வெள்ளைப் பசுவுக்கு முன்னாலே கொண்டுபோய்ப் போடு. தீவனம் இல்லாமல், பக்கத்துப் பசுவுக்கு முன்னாலே கிடக்கிற புல்லுக்குத் தலையைத் தலையை நீட்டுது” என்றார் நம்மாழ்வார்.

சண்முகம் அப்படியே போய், அந்தப் பசுவுக்குமுன் புல்லைப் போட்டுவிட்டு வந்தான். வந்து, “புல்லு நெறையத்தான் கிடக்கு. அது சும்மாதான் தலையை அந்தப்பக்கம் நீட்டுது” என்று சொன்னான்.

அப்பொழுது நம்மாழ்வாரின் பேரன் முற்றத்திலிருந்து வந்து எங்கள் பக்கத்தில் உட்கார்ந்தான். சிறிதுநேரம் எல்லாரும் மௌனமாக இருந்தோம்.

“ஐயா, அப்போ என்ன சொல்றீக? எனக்கும் நேரமாகுது” என்று தன் விஷயத்தை நம்மாழ்வாருக்கு ஞாபகமூட்டினான் சண்முகம்.

சிரித்த முகத்தோடு அவனைப் பார்த்துக்கொண்டு, “சண்முகம்! உனக்குப் படிக்கத் தெரியுமா?” என்று, அவர் கேட்டார்.

சம்பந்தமில்லாத இந்தக் கேள்வி எனக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணியது.

“நான் எங்கே படிச்சேன், ஐயா? நோட்டுலேகூட நான் ரேகைதானே வைச்சேன்?”

“அதுதானே கேட்டேன்! உனக்குக் கையெழுத்துக்கூடப் போடத் தெரியாது. ஆனால், எனக்குப் போடத் தெரியும். கையெழுத்துப் போடத் தெரியாத உனக்கு இப்படிக் கணக்குப் போடத் தெரிஞ்சிருந்தால், கையெழுத்துப் போடத் தெரிஞ்ச எனக்கு எப்படியெல்லாம் கணக்குப் போடத் தெரியும்னு யோசனை பண்ணிப் பார்த்தியா? நீ நிலத்தை வச்சிருந்தாலும் ஒண்ணு; எனக்குக் குடுத்தாலும் ஒண்ணு. நெலத்தைக் குடுக்கிறதனாலே உனக்கு நஷ்டமில்லை. வாஸ்தவம். ஆனால், அந்த நிலத்தை நான் எடுத்துக்கிட்டால் எனக்கு லாபம் இருக்கணுமில்லே? உன் நிலம் – அதுவும் ஆறு மைலுக்கு அந்தப் பக்கம் அடுத்த ஊரிலே இருக்கிற நாலு ஏக்கர் – எனக்குக் கிடைக்கிறதனாலே, என் உடம்பு எவ்வளவு பருக்கும்? எத்தனை கோபுரம் என்னாலே கட்ட முடியும்?”

“அப்படியா சொல்றது?” என்றான் சண்முகம்.

“வேறே எப்படிச் சொல்றது? உன் கணக்குப்படி நிலத்தைக் குடுக்கிறதனாலே உனக்கு நஷ்டமில்லை. என் கணக்குப்படி, நிலத்தை எடுத்துக்கிறதனாலே எனக்கு லாபமுமில்லை” என்று கூறிவிட்டுச் ‘சரி தானே?’ எனச் சிறு குழந்தையைப்போல் என்னைப் பார்த்துக் கேட்டார்.

நான் என்ன பதில் சொல்லுவது ?

“நீங்க நெலத்தை எடுத்துக்கிடலேன்னா என் கடன் தீராதே! உள்ளூரிலேயே வித்துப் பணத்தைக் குடுத்திறலாம்னுதான் பார்த்தேன். ஆனால், வலிய விக்கப் போகிறபோது ஏக்கரை ஐம்பது ரூபாய்க்குக் கேக்கக்கூட ஆளில்லை. அநியாயமாக் கொறைச்சிக் கேக்கிறாக!”

அந்தச் சமயத்தில் நம்மாழ்வாரின் பேத்தியும் திண்ணைக்கு வந்தாள்.

அவர் ஒன்றும் சொல்லாமல் வீட்டுக்குள்ளே எழுந்துபோய், ஐந்து நிமிஷங்களுக்குள் சண்முகம் எழுதிக்கொடுத்த புரோநோட்டுடன் வெளியில் வந்தார். “சண்முகம்! இப்படி வா” என்று அவனைக் கூப்பிட்டார். அவன் அருகில் வந்ததுதான் தாமதம், நோட்டை இரண்டாகக் கிழித்து அவன் கையில் கொடுத்துவிட்டார், நம்மாழ்வார்.

சண்முகத்தின் கைகள் நடுங்கின. இரண்டு கைகளையும் தலைக்குமேல் தூக்கி, “ஐயா..!.” என்று என்னவோ சொல்ல முன்வந்தான்.

நம்மாழ்வார் தன் பேத்தியைப் பார்த்து, “ருக்மிணி, சண்முகத்துக்கு மோர் கொண்டுவந்து குடு. நம்ம பசுவுக்கு, அவன் புல்லெல்லாம் எடுத்துப் போட்டான் பார்த்தியா ? போ, சீக்கிரம் கொண்டு வா” என்றார்.

சண்முகத்தைத் திரும்பியே பார்க்காமல் என் பக்கம் திரும்பிக்கொண்டு, “தம்பி! நான் சொன்னதை மறந்திறாதே. நல்ல போர்வையா இருக்கணும், பார்த்து வாங்கி வா” என்று பேச்சை மாற்றினார்.

அப்போது ருக்மிணி, ஒரு பெரிய செம்பைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வந்து சண்முகத்திடம் கொடுத்தாள். வாங்கிப் பார்த்தால் அதில் மோர் இல்லை; பால் இருந்தது.

தெரியாமல், பால் பானையில் மொண்டுகொண்டு வந்துவிட்டாள் குழந்தை!

“தம்பி, நம்ம பேத்தி எப்படி ?” என்று என்னிடம் சொல்லிவிட்டு நம்மாழ்வார் சிரித்தார்.

எனக்கு மெய் சிலிர்த்தது.

“உங்கள் கணக்கை உங்கள் பேத்தியும் படித்துக் கொண்டாள்” என்று நான் சொன்னதும், அவர் அப்படியே அந்தக் குழந்தையைத் தமது மடிமீது இழுத்து வைத்துக்கொண்டு கொஞ்சியதும் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கின்றன.

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. சண்முகம், தன் நிலத்தை நம்மாழ்வாரையே எடுத்துக்கொள்ளுமாறு கூறியது ஏன் ?
2. நம்மாழ்வார் போட்ட கணக்கு என்ன ?

அணி

"அவள் நடந்து வந்தாள்."

"அவள் அன்னம்போல நடந்து வந்தாள்."

இவ்விரு தொடர்களைப் படித்துப் பாருங்கள். முதல் தொடர் இயல்பாக உள்ளது. அடுத்த தொடர் படிப்பதற்கு இனிமை தருகிறது.

பெண்ணொருத்தி, தன் இயல்பான அழகை ஆடை, அணிகலன்கள் அணிந்து, ஒப்பனைசெய்து கொள்வதுபோலப் புலவர், தம் கற்பனை ஆற்றலாலும் மொழிப்புலமையாலும் சொல்லிலும் பொருளிலும் அழகு சேர்த்துப் பாடல்கள் இயற்றுவர்.

இத்தகைய செய்யுட்களில் காணப்படும் அழகே அணி எனப்படும். இதனால், சொல்லப் புகும் கருத்து எளிதில் புரியும்; படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் இனிமை சேர்க்கும்.

அணியில்லாத கவிதை பணியில்லாத வனிதை என்பர்.

அணிகள் சிலவற்றை இங்குக் காணலாம்.

1. ஏகதேச உருவக அணி

கவிஞர், தாம் எடுத்துக்கொண்ட பல பொருள்களை உருவகப்படுத்திக் கூறும்போது ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி, அதனோடு தொடர்புடைய மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது, ஏகதேச உருவக அணி எனப்படும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். – குறள், 10

இதில் பிறவியைக் கடலாக உருவகப்படுத்திவிட்டு, அதனைக் கடக்க உதவும் இறைவனடியைத் தெப்பமாக உருவகப்படுத்தாமையால், இஃது ஏகதேச உருவகஅணி ஆயிற்று.

2. இல்பொருளுவமையணி

உலகில் இல்லாத பொருளை ஒன்றிற்கு உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமை அணி எனப்படும்.

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. – குறள், 78

இக்குறட்பாவைப் படித்துப் பாருங்கள். உள்ளத்தில் அன்பில்லாத ஒருவர் குடும்ப வாழ்க்கை நடத்துவது என்பது, பாலை நிலத்தில், பட்டுப்போன மரம் தளிர்விட்டு வளர்வது போன்றது. திருவள்ளுவர், இக்குறட்பாவில் அன்பில்லாதவன் வாழ்க்கை, பாலைநிலத்தில் பட்டுப்போன மரம் தளிர்விட்டு வளர்வதற்கு ஒப்பானது என இல்லாத பொருளை உவமித்துக் கூறுகிறார்.

இவ்வாறு புலவர் உலகில் இயல்பாக இல்லாத பொருளை உவமையாக்கிக் கூறுவது இல்பொருளுவமை அணி ஆகும்.

3. பிறிதுமொழிதல் அணி

புலவன், தான் கருதிய பொருளை நேரடியாகச் சொல்லாமல், அதனோடு தொடர்பு உடையனவற்றைச் சொல்லி விளங்கவைப்பது பிறிது மொழிதல் அணி ஆகும்.

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். – குறள், 475

இக்குறட்பாவில், மயிலிறகு மிகவும் மென்மையானதாக இருப்பினும், அதனை அளவுக்கு அதிகமாக ஏற்றினால் வண்டியின் வலிய அச்சும் முரிந்துவிடும் என்பது, இக்குறளின் பொருளாகும். பகைவர்கள், எளியவர்கள் ஆயினும் மிகுதியாக்கிக் கொள்ளல் கூடாது என்ற கருத்தைப் பெற வைக்கிறார்.

இதன்மூலமாக வலிமை குறைந்த அரசர் பலர் கூடிப் போரிட்டால் பெரும்படையுடைய பேரரசரையும், எளிதில் வென்றுவிடுவர்' என்னும் கருத்தை உட்பொருள் தோன்ற விளக்கியுள்ளார். எனவே, இப்பாடலில் பிறிதுமொழிதலணி அமைந்துள்ளது.

4. வேற்றுமையணி

செய்யுளில் இருபொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமையைக் கூறிய பின்னர் அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணியாகும்.

தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. – குறள்,129

தீயினால் சுடுவதும், நாவினால் தீயசொற்களைக்கொண்டு சுடுவதும் என்பது ஒற்றுமை, தீயினால் சுட்டது ஆறும்; நாவினால் சொன்னது ஆறாது என்பது வேற்றுமையாகும். எனவே, இப்பாடலில் வேற்றுமையணி இடம் பெற்றுள்ளது.

5. நிரல்நிறையணி

சொல்லையும் பொருளையும் வரிசையாக (நிரலாக) நிறுத்தி, நேரே பொருள் கொள்வது நிரல்நிறை அணி யாகும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. – குறள், 45

இக்குறட்பாவைப் படித்துப் பாருங்கள். "இல்வாழ்க்கையின் பண்பு எனப்படுவது அன்பு காட்டுவது. இல்வாழ்க்கையின் பயன் எனப்படுவது அறம்செய்தல் என்பதாகும்" என்பது இக்குறட்பாவின் கருத்து.

இக்குறட்பாவில் அன்பும் அறனும் முதலடியில் அமைந்துள்ளன. அடுத்த அடியில், அச் சொற்களோடு முறையாகப் பொருந்தும் வரிசைப்படி பண்பு, பயன் என்னும் சொற்கள் அமைந்துள்ளன. எனவே, இது நிரல் நிறையணி.

பயிற்சி :

பின்வரும் பாடல்கள் எவ்வகை அணிகள் எனக் கண்டறிந்து எழுதுக.

அ) சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

ஆ) அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண்.

இ) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. உலகில் இல்லாத பொருளை உவமித்துக் கூறுவது ____________________ .

   அ) பிறிதுமொழிதல் அணி ஆ) இல்பொருள் உவமை அணி இ) வேற்றுமை அணி

2. ஒருபகுதியை மட்டும் உருவகம் செய்வது ____________________ .

   அ) உவமையணி ஆ) ஏகதேச உருவக அணி இ) பிறிதுமொழிதலணி

ஆ) குறுவினாக்கள்

1. ஏகதேச உருவக அணி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
2. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
   நீங்கின் அதனைப் பிற.'' – இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணி யாது? விளக்குக.
3. 'இருகை யுடைக்களி றன்னவன்' – இத்தொடரில் வரும் அணி யாது? விளக்குக.

வகுப்பறைத்திறன்கள்

எழுதுதல் திறன் : (மாதிரி நேர்காணல்)

செய்தியாளர் : வணக்கம் ஐயா, நேர்காணலைத் தொடங்குமுன் இராசராசன் விருதுபெற்ற தங்களுக்கு எங்கள் இதழின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எழுத்தாளர் : வணக்கம், தங்கள் வாழ்த்துக்கு நன்றி.

செய்தியாளர் : நீங்கள் உங்களது எழுத்துப்பணியை எப்போது தொடங்கினீர்கள்?

எழுத்தாளர் : கல்லூரியில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தபோதே எழுதத் தொடங்கி விட்டேன்.

செய்தியாளர் : முதலில் வரலாற்றுப் புதினங்களைத்தான் எழுதினீர்களா?

எழுத்தாளர் : இல்லை. முதலில் சமூகக்கதைகள், இலக்கியக்கதைகள், வரலாற்றுச்

சிறுகதைகள் ஆகியவற்றை எழுதினேன். நாளாக நாளாக வரலாற்றுக்கதைகள் மீது ஈடுபாடு அதிகமானதால், அதிலேயே முழுக்கவனம் செலுத்தி எழுதி வருகிறேன்.

செய்தியாளர் : இதுவரை எத்தனை வரலாற்று நூல்கள் எழுதியிருக்கிறீர்கள்?

எழுத்தாளர் : இதுவரை அறுபதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளேன். மேலும், இந்த ஆண்டில் இருநூல்களை வெளியிட இருக்கிறேன்.

செய்தியாளர் : மெத்த மகிழ்ச்சி, ஐயா. நீங்கள் மேன்மேலும் பல நூல்களை எழுதவும், பல விருதுகளைப் பெறவும் வாழ்த்துகள்.

எழுத்தாளர் : மிக்க நன்றி.

பயிற்சி : நேர்காணலை நிறைவு செய்க.

மாணவர் : வணக்கம் , ஐயா. தங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

கவிஞர் : வணக்கம், ...

மாணவர் : தாங்கள் முதல் கவிதையை எழுதிய சூழலைக் குறித்துச் சொல்லுங்கள்.

கவிஞர் : எங்கள் கல்லூரியில் கலை இலக்கிய விழாவிற்காகக் கவிதைப் போட்டி ஒன்று நடைபெற்றது. அப்போது ....

மாணவர் : அக்கவிதைக்குப் பரிசு கிடைத்ததா ?

கவிஞர் : ஆம். ....

மாணவர் : உங்கள் கவிதைகளுக்கான கருப்பொருளை எவ்விதம் தேர்ந்தெடுக்கிறீர்கள் ?

கவிஞர் : பெரும்பாலும் சமுதாயச் சிக்கல்களையே எனது கவிதைகளின் பாடுபொருள்களாகக் கொண்டு எழுதி வருகிறேன்.

மாணவர் : தாங்கள் இதுவரை எவ்வளவு கவிதைகள் எழுதியிருக்கிறீர்கள் ?

கவிஞர் : நான் இதுவரை ....

மாணவர் : நீங்கள் என்போன்ற மாணவர்களுக்குக் கூறும் அறிவுரை என்ன, ஐயா ?

கவிஞர் : ....

மாணவர் : இதுவரை எங்களோடு உங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டமைக்கு மிக்க நன்றி, ஐயா.

கவிஞர் : நன்றி, உங்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துகள்.

கதைக்குறிப்புகளைக் கொண்டு கதை எழுதுதல்.

பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கதை எழுதுக.

ஆடு மேய்க்கும் சிறுவன் – ஆடுகளை மேய்த்தல் – அரசர் அங்கு வருதல் – அரசருக்கு நீர் வேட்கை – சிறுவன் குளம் இருக்குமிடத்தைக் கூறுதல் – அரசன் சிறுவனை நீர்கொண்டு வருமாறு கூறுதல் – அரசர் என அறியாமை – சிறுவன் போகமுடியாது எனவும், அதற்கான காரணத்தையும் கூறுதல் – அரசர் ஆடுகளைத்தான் பார்த்துக்கொள்வதாகக் கூறுதல் – சிறுவன் மறுத்தல் – அரசரின் பரிவாரங்கள் வருதல் – சிறுவன் மனத்துணிவு – அரசன் சிறுவனைத் தன்னிடமே வேலைக்கு வைத்துக்கொள்ளுதல்.

மொழித்திறன் பயிற்சி

அ) ஒருமைச் சொற்களைப் பன்மையாக மாற்றுக.

(எ–டு) யானையின் கண் சிறியது.

யானையின் கண்கள் சிறியன.

பயிற்சி :

1. காட்டு மரம் உயரமானது. ________________
2. மயில் அழகானது. ________________
3. பழம் பழுத்தது. ________________
4. நான் படித்தேன். ________________

ஆ) பன்மையை ஒருமையாக மாற்றுக.

(எ–டு) பசுவும் கன்றும் மேய்ந்தன.

பசுவுடன் கன்று மேய்ந்தது.

பயிற்சி :

1. மரத்தில் காயும் கனியும் இருந்தன. ________________
2. சிறுவனும் சிறுமியும் வந்தனர். ________________
3. அண்ணனும் தம்பியும் பரிசு பெற்றனர். ________________
4. பாலும் தேனும் இனித்தன. ________________
5. யானைப்படையும் குதிரைப்படையும் சென்றன. ________________

நினைவு கூர்க.

விடுபட்ட தமிழெண்களை எழுதுக.

51	௫௧	61		71		81		91	
52		62		72		82		92	
53		63		73		83	௮௩	93	௯௩
54		64		74		84	௮௪	94	
55		65	௬௫	75		85		95	
56	௫௬	66		76		86		96	
57		67		77		87		97	
58		68		78	௭௮	88		98	
59		69		79		89		99	
60		70		80		90		100	

கட்டுரைப் பயிற்சி : சுற்றுச்சூழல் பாதுகாப்பு.

வாழ்க்கைத்திறன்

கூர்சிந்தனைத்திறன்

அறிவழகன் எல்லாப் பாடங்களிலும் நல்ல மதிப்பெண் பெறுபவன். இதுவரை எளிதாக இருந்த கணிதப் பாடம் ஒன்பதாம் வகுப்பிற்கு வந்த பிறகு கடினமானதாகிவிட்டது.

காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளில் மற்றப் பாடங்களைப்போல் சிறந்த மதிப்பெண்களைப் பெற, அவனால் இயலவில்லை. ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள அவனுக்குத் தயக்கமாக இருந்தது. அதற்குக் காரணம், கணித ஆசிரியர்மீது அவனுக்கிருந்த பயம்தான். இருப்பினும், கணிதப் பாடத்தில் சிறந்த மதிப்பெண் பெறவேண்டும் என்னும் உந்துதல், அவன் மனத்தில் இருந்துகொண்டே இருந்தது.

பெற்றோர், கணிதப் பாடத்தில் மதிப்பெண் ஏன் குறைந்தது எனக் கேட்டனர்; வகுப்பாசிரியரும் கணிதப் பாடத்தில் மேலும் கவனம் செலுத்துமாறு அறிவுரை கூறினார். கணிதப் பாடத்தில் நல்ல மதிப்பெண்கள் பெறச் சிந்தித்தவண்ணம் இருந்தான்.

1. இத்தகைய சூழல் உங்களுக்கு எப்பொழுதாவது ஏற்பட்டதுண்டா?
2. அறிவழகன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?

பண்பு

சுற்றுச்சூழல் பாதுகாத்தல்

எல்லாவற்றிலும் தூய்மையை விரும்புபவன் அழகன். அவன், தன் தூய்மையைப் பேணுதலுடன், சுற்றுப்புறத் தூய்மையைப் பற்றியும் சிந்திப்பவன்; தேவையற்ற தாள்களோ பொருள்களோ கண்ணில்பட்டால், அவற்றை எடுத்துக் குப்பைத்தொட்டியில் போடுவான்.

வீட்டிலும் பள்ளியிலும் அவன் அவ்வாறே நடந்துகொள்வான். மேலும், அவன் நண்பர்களையும் தூய்மையைப் பேணுமாறு வலியுறுத்துவான். அவர்களுள் சிலர் இவனைக் கண்டாலே, “சுத்தக்காரன் வரான்டா” என ஏளனமாகப் பேசுவதும் உண்டு.

அவன், அதனைப்பற்றிக் கவலைப்படாமல் சுற்றுச்சூழல் இயக்கங்களிலும் பங்கேற்றுத் தனது பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தான். தன் வீட்டின் பின்புறம் மரக்கன்றுகளை நட்டுப் பாதுகாத்து வந்தான்.

1. தன் தூய்மையைப் பேணும் வழிமுறைகள் யாவை?
2. சுற்றுச்சூழல் இயக்கங்கள்பற்றி நீவிர் அறிந்தன யாவை?
3. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நீவிர் என்னென்ன செய்கிறீர்கள்?
4. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க என்னென்ன செய்யலாம்?

மதிப்புக்கல்வி

தீண்டாமை

காந்தியடிகள் சிலகாலம் தென்னாப்பிரிக்காவில் வழக்குரைஞராகப் பணியாற்றி வந்தார். ஒருநாள் தொடர்வண்டியில் முதல்வகுப்பில் பயணம் செய்துகொண்டிருந்தார். அப்போது, அதே பெட்டியில் அவருடன் பயணம் செய்து வந்த வெள்ளையர் ஒருவர், அவரைக் கீழே இறங்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தினார்.

அதற்குக் காந்தியடிகள், தன்னிடம் முதல் வகுப்புப் பயணச்சீட்டு இருப்பதாகவும், இதில்தான் பயணம் செய்வேன் என்று கூறி இறங்க மறுத்தார். ஆனால், அந்த வெள்ளையர் தொடர்வண்டிப் பாதுகாவலரை அழைத்துக் கறுப்புநிறம் கொண்ட இந்தியர், வெள்ளையருடன் பயணம் செய்யக்கூடாது என்று கூறிக் காந்தியடிகளைக் கீழே இறக்கிவிட்டார். நிறத்தைக் காரணம் காட்டித் தம்மைத் தீண்டத்தகாதவர் என்று கூறி ஒதுக்கும் தீண்டாமைச் செயலை எண்ணிக் காந்தியடிகள் வருந்தினார்.

வெள்ளையர், காந்தியடிகளிடம் நடந்துகொண்டது முறைதானா ?

மொழியாக்கம் செய்க.

Bamboo is one of the world’s fastest growing plants. It can grow as much as 3 feet in a day. One type of bamboo grows to a height of 120 feet. Its stem is tough and hallow. Bamboo is actually a kind of grass. But unlike other grasses, most bamboos grow very tall. We use bamboo to make fishing poles and furniture. Tender bamboo shoots are eaten as vegetables.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. A wolf in sheep’s clothing.
   பசுத்தோல் போர்த்திய புலி.
2. Union is strength.
   ஒற்றுமையே வலிமை.
3. No smoke without fire.
   நெருப்பில்லாமல் புகையாது.
4. Might is right.
   வல்லான் வகுத்ததே வாய்க்கால்.
5. Many things fall between the cup and the lip.
   கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.